பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | தை 11 | புதன்கிழமை 24.01.2018 | கதிர் 80

## தேர்தல் தொடர்பில் முல்லைத்தீவில் 4 பேர் கைது

முல்லைத்தீவு, ஜன.24

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேர்தல் சட்டத்தை மீறிய நான்கு பேர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் பிரசார சுவரொட்டி

பக்கம் 18 ›››

## ஊவா முதல்வர் கைதாகிப் பின் பிணையில்!

கொழும்பு, ஜன.24

பதுளை மகளிர் பாட சாலை அதிபரான பெண் மணி ஒருவரைத் தமது உத்தியோகபூர்வ இல்லத் துக்கு அழைத்து, மிரட்டி, தமக்கு முன்னால் முழங் காலில் இருத்தினார் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பில்

பக்கம் 18 ›››



# தமிழர்களுக்கு திருப்தி தரும் தீர்வே தேவை!

## ஐரோப்பிய ஒன்றியத் தூதரிடம் சம்பந்தன் நேரில் வலியுறுத்தல்

கொழும்பு, ஜனவரி 24

இலங்கையின் நீண்டகாலத் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் புதிய அரசமைப்பு உருவாக்கம் முன்னுரிமைப்படுத்தப்பட்டு விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு உருவாக்கப்படும் புதிய அரசமைப்பு நியாயமானதாகவும், நிரந்தரமானதாகவும் தமிழ் மக்களுக்குத் திருப்தியளிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

– இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான அரசியல் பிரிவுத் தலைவர் போல் கொட்பிறீயிடம் நேரில் வலியுறுத்தித் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

பக்கம் 17 ›››

## வரவு – செலவுத் திட்டத்தை ஆதரிப்பதற்கான லஞ்சமே தலா 2 கோடி ரூபா ஒதுக்கீடு!

### சிவசக்தி ஆனந்தனை வழிமொழிகிறார் சுரேஷ்

- எஸ்.நிதர்ஷன் -

வரவு – செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக கைதூக்காத பின்னணியில் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந் தனுக்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்படவில்லை. கைதூக்கியஏனைய 15 நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கும் தலா இரண்டு கோடி ரூபா நிதி வழங்கப்பட்டிருக்கின்றமை அம்பலமாகியுள்ளதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வரவு – செலவுத் திட்டத்திற்காக இடம் பெற்ற இப்பேரத்தை

பக்கம் 17 ›››

## “சரா ஒரு சருகுப்புலி; வியாபாரி! அவரின் மிரட்டலுக்கு அஞ்சோம்!!”

### அடித்துக் கூறுகின்றார் சுரேஷ் பிறேமச்சந்திரன்



- எஸ்.நிதர்ஷன் -

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் ஒரு வியாபாரி. அதனைத் தவிர்த்துப் பார்த்தால் அவர் ஒன்றுமே இல்லாதவர். ஆகையினால் அத்தகைய சருகுப்புலியின் மிரட்டல்களுக்கு அஞ்சத்தேவையில்லை. அவ்வாறு அஞ்சுகின்ற நிலைமையில் நாங்களும் இல்லை.

– இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும்

பக்கம் 17 ›››



## அரச பொறிமுறையைத் தந்திரமாகப் பயன்படுத்தி வெள்ளைப் பத்திரம் மூலம் பெரும் கொள்ளை

### பிணைமுறி திருடர்கள் முன்பாக விவாதிக்க ஜே.வி.பி. அழைப்பு

கொழும்பு, ஜன.24

“அரச பொறிமுறையொன்றைத் தந்திரமாகப் பயன்படுத்தி மக்களின் பெருந்தொகைப் பணத்தை வெள்ளைப் பத்திரம் மூலம் கொள்ளையடிக்கும் கைங்கரியமே அரங்கேறியிருக் கின்றது என்பது பிணைமுறி விற்பனை தொடர்பான விசாரணை அறிக்கையின் மூலம் அம்பலமாகியிருக் கின்றது. அது குறித்து, அதனுடன் தொடர்புடைய திருடர்களுக்கு முன்னால்

பக்கம் 18 ›››



## ரயில்வே ஊழியர்கள் மீண்டும் இன்று வேலை நிறுத்தம்



பிரதான கோரிக்கைகள் நான்கை முன்வைத்து இன்று மாலை 4 மணியின் பின்னர் பணிப்புறக் கணிப்பை முன்னெடுக்கவுள்ளதாக ரயில் சாரதி

பக்கம் 18 ›››

### அரசியலில் தன்னை ஒழிக்க தமிழரசு முயற்சியாம்; அதனால்

## தேர்தலில் யாருக்கும் பிரசாரம் செய்யவே மாட்டாராம் அனந்தி!



- எஸ்.நிதர்ஷன் -

தமிழரசுக் கட்சியே தனக்கு எதிராக – அதுவும் தன்னை–அரசியலிலிருந்தே இல்லாமல் செய்கின்ற – வேலைகளை நேரடியாக முன்னெடுக் கின்ற நிலையில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பிரசாரங்களை முன்னெடுக்காதுதாம் ஒதுங்கியிருக்கப் போகிறார் என வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

எனினும் இத் தேர்தலில் தேசியம் சார்ந்து போட்டியிடுகின்ற பெண் வேட்பாளர்கள் அனைவருக்கும்

பக்கம் 18 ›››

### இது ரகசியம் அல்ல!

திடீரென – உடனடியாக – நினைத்த நேரத்தில் தயாரிக்கக் கூடிய உணவுப் பொருள்களுக்கு இப்போது மவுசு கூட.

‘இன்ஸ்டன் ரீ’யில் தொடங்கி, ‘இன்ஸ்டன் நூடில்ஸ்’ என்ற வரிசையில்

பக்கம் 18 ›››

## ஆனைக்கோட்டை மூதாட்டி கொலை; சந்தேகத்தில் 5 இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ்ப்பாணம், மானிப்பாய், ஆனைக்கோட்டை வீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வயோதிபப் பெண் ஒருவர் அடித்துக்கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பக்கம் 18 ›››

## இரு ஆணைக்குழு அறிக்கைகளும் நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு!

கொழும்பு, ஜன.24

மத்திய வங்கி பிணை முறி மோசடி விவகாரம் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையும், கடந்த அரசின் காலத்தில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் பாரிய நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்

பக்கம் 18 ›››

## சு.கவிலிருந்து பிரிந்து உருவான எக்கட்சியும் உருப்படவேயில்லை!

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு


கொழும்பு, ஜன.24

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக காலத்துக்குகாலம் பல கட்சிகள், அதிலிருந்து பிரிந்து உருவாக்கப்பட்டன. பல முயற்சிகள் எடுக்கப்பட்டன.

பக்கம் 18 ›››

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலீட்டு வாய்ப்புகளைக் கண்டறிவதற்கு ஜப்பானின் 70 பிரதிநிதிகள் இலங்கைக்கு



கொழும்பு, ஜன. 24

ஜப்பானின் முன்னணி வணிக நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகள் 70 பேரைக் கொண்ட உயர்மட்டக் குழுவொன்று இன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள வுள்ளது.

உயர் அதிகாரம் கொண்ட வணிக நிறுவனங்களின் பிரதிநிதிகளின் குழுவொன்றுகடந்த 40ஆண்டுகளில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும்.

இலங்கையில் முதலீட்டு மற்றும் வணிக வாய்ப்புகளை அடையாளம் காண்பதற்காகவே ஜப்பானின் உயர் மட்டக் குழு கொழும்பு வர வுள்ளது.

இந்தக் குழுவில், ஜப்பானின் முன் னணி நிறுவனங்களான, ரொயோட்டா, ஹொண்டா, மிற்சுபிசி, சுமிரோமோ, மிட்சுயி ஜப்பான் எயர் லைன்ஸ், ஈஸ்ரேர்ன் வங்கி, ரோக்கியோ மிட்சு பிசி வங்கி, நிப்பொன் எயர்வேய்ஸ், நிப்பொன்ஸ்டீல்ஸ் உள்ளிட்டவற்றின் பிரதிநிதிகள் இடம்பெறவுள்ளனர்.

இந்தக் குழுவினர் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்களுடனும் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

2016 ஆம் ஆண்டு ஜப்பான்-இலங்கை இடையிலான இரு தரப்பு வணிகம், 115 கோடி டொலர்களாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக் கது.

(க)

## அரிய வகையான இறால் இனம் இலங்கை கடலில் கண்டுபிடிப்பு!

கொழும்பு, ஜன. 24

இலங்கையில் மிகவும் அரிய வகை இறால் இனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தங்காலை கடற்படை முகா மிற்கு அருகிலுள்ள கடற்கரை யில் இந்த இறால் கிடைத்துள்ளது என தேசிய நீரியியல் வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவ னம்தெரிவித்துள்ளது.



கடந்த 18 ஆம் திகதி மீனவர்களால் இறால் கண்டுபிடிக் கப்பட்ட நிலையில், இந்த இறாலை நாரா நிறுவனத் திடம் ஒப்படைத்துள்ளது என நிறுவனத்தின் ஆய்வாளர் உப் புல் லியனகே தெரிவித்துள்ளார்.

இந்த இறால் தெற்காசிய கடலில் அரிய வகையில் கிடைக்கும் எனவும் இவை அழிந்து வரும் உயிரினமாக உள்ளதெனவும் உப்புல் தெரிவித்துள்ளார்.

கடல் அலையில் சிக்கிய நிலை யில் இறால் இலங்கை கடற்பரப் பிற்கு வந்திருக்கலாம் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

28 வருடங்களின் பின்னர் இறால்பிடிக்கச் சென்ற சந்தர்ப் பத்தில் அரிய வகை இறால் சிக் கியது என சித்தன புஷ்ப குமார என்பவர் தெரிவித்துள்ளார்.

## சுவிற்ஸர்லாந்தில் அடைக்கலம் கோரும் இலங்கையரின் எண்ணிக்கை வீழ்ச்சி

கொழும்பு, ஜன. 24

சுவிற்ஸர்லாந்தில் அடைக்கலம் தேடுவோரின் எண் ணிக்கை கடந்த ஆண்டு வெகுவாகக் குறைந்துள் ளது என சுவிஸ் அரச குடிவரவுச் செயலகத்தின் தகவல்கள் தெரிவிக் கின்றன.

2017ஆம் ஆண்டு சுவிற்ஸர்லாந் தில் அடைக்கலம் கோரியவர்களின் எண்ணிக்கை, 33.5 வீதத்தால் குறைந்திருக்கிறது.

2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அடைக்கலம் கோருவோர்களிடம் இருந்து ஆகக் குறைந்த விண்ணப் பங்கள்கடந்த ஆண்டிலேயே கிடைத் துள்ளன.

கடந்த ஆண்டு எரித்திரியாவைச் சேர்ந்தவர்களே ( 3,375) அதிகள வில் சுவிசில் அடைக்கலம்கோரி யுள்ளனர். எனினும், இது முன்னைய ஆண்டைவிட 35 வீதம் குறை வாகும். அடுத்து, சிரியாவில் இருந்து ஆயிரத்து 951 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இது 9 வீதம்



குறைந்துள்ளது.

ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த ஆயிரத்து 217 பேர் அடைக்கலம் கோரியுள்ளனர். இது 62 வீத வீழ்ச்சி யாகும்.

துருக்கியில் இருந்து 852 பேர் சுவிஸில் அடைக்கலம் கோரியுள் ளனர். கடந்த ஆண்டை விட இது 62 வீதம் அதிகரித்துள்ளது. சோமா லியாவில் இருந்து 843 பேர் அடைக்கலம் கோரியுள்ளனர்.

அதையடுத்து, இலங்கையில் இருந்து 840 பேர் சுவிஸில் அடைக் கலம் கோரியுள்ளனர். இது 38.8 வீத வீழ்ச்சியாகும்.

## முல்லைத்தீவில் 4 பேர் கைது

முல்லைத்தீவு, ஜன. 24

முல்லைத்தீவில் தேர்தல் சட்டத்தை மீறிய நான்கு பேர் நேற்றுமுன்தினம் பிற்பகல் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் பிரசாரச் சுவரொட்டிகளை சட்டவிரோதமாக எடுத்து சென்ற குற்றத் தின் அடிப்படையில் முள்ளியவளை பகுதியில் ஒருவர் கைதாகியுள்ளார்.

ஏனைய மூன்று சந்தேகநபர்களும் விசுவமடு மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேசங்களில் கைதாகியுள்ளனர் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்

மேலும், தேர்தல் சட்டத்தை மீறி செயற்படுபவர்களைக் கைது செய்து நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்த விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ்மா அதி பர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக் கது.

(கு)

## பொ.பெரமுனவின் மனுக்கள் நீதிமன்றத்தால் நிராகரிப்பு

கொழும்பு, ஜன. 24

இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக சில பகுதிகளில், பொதுஜன பெரமுனவால் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக் கப்பட்டமைக்கு எதிராக அந்தக் கட்சியால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.


நான்கு உள்ளூராட்சி மன்றங்களின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட மைக்கு எதிராகவே பொதுஜன பெரமுன வால் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப் பட்டிருந்தது.

பாணந்துறை, மஹியங்கனை, அகலவத்தை, மற்றும் திறப்பனை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

# சிங்கப்பூர் – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்து







கொழும்பு, ஜன. 24

இலங்கைக்கும் சிங்கப் பூருக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை நேற்றுக் கைச்சாத்திடப்பட் டுள்ளது.

சிங்கப்பூர் பிரதமர் லீ ஷியன் லூங் மற்றும் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன விற்கும் இடை யிலான இருதரப்பு பேச்சின் பின் இந்த உடன்படிக்கை கைச்சாத் திடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றுள் ளது.

இந்த ஒப்பந்தத்தில் அபிவி ருத்தி மூலோபாய மற்றும் சர்வ தேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம சிங்கப்பூர் கைத் தொழில் வர்த்தக அமைச்சர் எஸ். ஈஸ்வரன் ஆகியோர் கைச் சாத்திட்டுள்ளனர்.

இந்த உடன்படிக்கை ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன பிரதமர் ரணில் விக்கிரமசிங்க , சிங்கப்பூர் பிரதமர் லீ ஷியன் லூங் முன்னிலையில் கைச்சாத் திடப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் பிரதமர் லீ சியென் லூங் மூன்று நாள்கள் அதி காரபூர்வ விஜயமாக நேற்று முன்தினம் மாலை இலங் கையை வந்தடைந்திருந்தார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் சிங்கப்பூர் பிரத மரை, இலங்கையின் சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவி ருத்தி அமைச்சர் சாகல ரத் நாயக்க மற்றும் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் வரவேற்றனர்.

சிங்கப்பூர் பிரதமருடன், பல்வேறு துறைசார் விற்பன்னர் களைக் கொண்ட குழுவொன் றும் இலங்கை வந்துள்ளது.

நேற்று காலை சிங்கப்பூர் பிரதமருக்கு ஜனாதிபதிச் செய லகத்தில் அரசுமுறை வரவேற் பும், அணிவகுப்பு மரியாதையும் அளிக்கப்பட்டது.

(கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கு பெரும் துரோகம் சிவசக்தி ஆனந்தன் இழைத்துள்ளார்!

## மாகாணசபை உறுப்பினர் கஜதீபன் குற்றச்சாட்டு



சிவசக்தி ஆனந்தன் தமிழ் மக்களிற்குப் மிகப்பெரிய துரோகத்தை செய்து விட்டார் என வட மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்தார்.

வவுனியா – திருநாவற்குளத்தில் நகரசபை வட்டாரம் ஒன்றில் போட்டியிடும் சு.காண்டீபனின் அலுவலகம் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

ஒரு காலத்திலே எமது மண்ணிலே சாதிய அடக்குமுறைகள் மிகப்பலமாக இருந்தன. தீண்டத்தகாவதவர்கள் என்று சிலரை ஒதுக்கி வைத்தோம். அவ்வாறான சாதியம் இருக்கக்கூடாது, நாங்கள் எல்லோரும் சமத்துவமாக இருக்க வேண்டும் என விரும்புகின்றோம். அதை வலியுறுத்துகிறோம். அதற்காகப் போராடுகின்றோம்.

ஆனால் தீண்டத்தகாதவர்கள் என்ற ஒரு சமூகம் இந்த மண்ணிலே இருக்க வேண்டியுள்ளது. தற்போது தேசியக்கட்சிகளிலே தமிழினத்திற்கு விரோதமாகக் களத்தில் யார் எல்லாம் நிற்கின்றார்களோ அவர்கள் எல்லாம் தீண்டத்தகாதவர்களே.

மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரி பால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க இவர்களிற்குள் பல முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால் இனம், மதம்,மொழி என்று வருகின்ற போது அவர்கள் ஒன்று படுகின்றார்கள்.

ஆனால் நாங்கள் மிகப் பல வீனமாக உள்ளோம். யார், யாருக்கு எல்லாம் வாக்களிக்கின்றோம், இது இந்த தேர்தலுடன் மாற்றப்பட வேண்டும்.

எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு கோடி ரூபாவைப் பெற்றிருக்கின்றார்கள். ஆனால் தான் மட்டும் பெறவில்லை என்று சிவசக்தி ஆனந்தன் கூறுகின்றார். ஆனால் 17ஆண்டுகளாக தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்த காரணத்தினால் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிவசக்தி ஆனந்தன், இந்த மக்களிற்குப் மிகப்பெரிய துரோகத்தை செய்தார். தனது வீம்பிற்காகத் தமிழ் மக்களின் அபிவிருத்திக்காகஅவர்களின்தொகுதி மக்களிற்கு வரவேண்டிய 2 கோடி ரூபாவைப் புறக்கணித்துள்ளார்.

இருப்பினும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்நிதியைப் பெற்று மக்களின் அபிவிருத்தித் திட்டங்களைச் செய்துள்ளனர். அவ்வாறு மக்களின் அபிவிருத்திக்காக இரண்டு கோடி ரூபாவைப் பெற்ற ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களை பற்றி அவர் விமர்சிக்கின்றார்.

குறிப்பாக என்னிடம் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் இந்நிதி ஒதுக்கீட்டில் பயன் பெறக் கூடிய சில திட்டங்களை கேட்டார். நான் 60 லட்சம் ரூபாவுக்கான திட்டங்கள் சில வற்றை கொடுத்தேன். இதற்காக கஜதீபன் 60 இலட்சம் ரூபா பெற்றார் என ஆனந்தன் சொல்லக்கூடும். – எனத் தெரிவித்தார்.

# ஊரெழுவில் மோட்டார் சைக்கிள் - ஹன்ரர் நேருக்கு நேர் மோதல்; இளைஞர் சாவு!

## மற்றொரு இளைஞர் படுகாயம்



யாழ். ஊரெழு பலாலி பிரதான வீதியில் நேற்றுப் பிற்பகல் மோட்டார் சைக்கிளும்சிறியரக ஹன்ரரும்நேருக்கு நேர்மோதி விபத்துக்குள்ளானதில் 25 வயதான இளைஞரொருவர் தூக்கி வீசப்பட்டுச் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இந்தக் கொடூர விபத்தில் மேலுமொரு இளைஞர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருபவை வருமாறு:-

நேற்றுப்பிற்பகல்யாழ்.குப்பிளானிலிருந்துயாழ்ப்பாணம்நகரை நோக்கி மோட்டார் சைக்கிளில் இரு இளைஞர்கள் சென்று கொண்டிருந்தனர். அச்சமயம் ஊரெழு, பலாலி பிரதான வீதியில் வயாவிளானிலிருந்து யாழ். நகரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று பயணிகளை ஏற்றிக் கொண்டிருந்தது.

அப்போது வேகமாக மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த இளைஞர் நிறுத்தப்பட்டிருந்த தனியார் பஸ்ஸை முந்திச் செல்ல முற்பட்ட நிலையில் நேர் எதிராக யாழ். நகரத்திலிருந்து வந்து கொண்டிருந்த சிறிய ஹன்ரர் வாகனத்துடன் மோதுண்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்களும் பல மீற்றர் தூரம் தூக்கி வீசப்பட்ட நிலையில், மோட்டார் சைக்கிளைச் செலுத்திய இளைஞர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறிப் பலியானார். அவருடன் பின்னாலிருந்து பயணித்த இளைஞர் படுகாயமடைந்த நிலையில் பொதுமக்களால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் ஆபத்தான நிலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இளைஞர்கள் பயணித்த மோட்டார்ச் சைக்கிள் சுக்குநூறாகிப் போயுள்ளது.

இந்தக் கொடூர விபத்தில் உயிரிழந்த இளைஞரும் பாடுகாயமடைந்த இளைஞரும் யாழ்.குப்பிளான் தெற்குப் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

இளைஞர் கடும் வேகத்தில் கவனயீனமான முறையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியமையே மேற்படி விபத்துக்கான காரணமென அந்த சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

சுன்னாகம் பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி

அனைத்து வகையான வாகனங்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் 1, 2, 3 வருட கால உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ஒட்டித்தரப்படும்

108, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 222 8680
077 592 5088

**அன்பான அரச அலுவலர்களே!**

'தூய கரங்கள் - தூய நகரம்' **'Clean hands – Clean City'**

பல்வேறு வழிகளிலும் எமது மக்களின் நலனுக்காய் உங்களை அர்ப்பணித்து கடமையாற்றும் அரச ஊழியர்களே, இச்சமூகத்தில் மிகப்பெரிய கருத்துருவாக்கங்களை செய்து சமூக மாற்றத்திற்கான அடித்தளத்தை இடும் நீங்களும்தான் அரசியல் மாற்றத்திற்கும் காரணமாக அமைய வேண்டும் என்பது எங்கள் அன்பான வேண்டுகோள்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் அபிவிருத்திக்கான தேர்தலாக இருந்தாலும் இது **பிரிக்கப்பட்ட வடக்கு கிழக்கில் பௌத்தத்திற்கு முன்னுரிமை கொடுத்து ஒற்றை யாட்சியை வலியுறுத்தும் இடைக்கால அரசியல் அமைப்பிற்கு** ஆதரவு தேடுவதாகவே அமையப்போகிறது என்பதே உண்மை. இதற்கு ஆதரவு தேடும் முகமாகவே தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உள்ளடங்கலான அரசின் பங்காளி கட்சிகள் யாவும் இத்தேர்தலில் களமிறங்கியுள்ளன என்பதை நாம் உணரவேண்டும்.

எனவே உங்கள் மனசாட்சியின் கதவுகளை உரக்கத்தட்டி இப்பெரும் ஆபத்தினை உணர்ந்து எமக்கு வாக்களித்து அரசியல் பேரம்பேசுகின்ற ஒரு சக்தியாக எதிர்காலத்தில் எமது அரசியல் இயக்கத்தை உருவாக்குவீர்கள் என்பது எங்களுடைய அசையாத நம்பிக்கை.

அதுமட்டுமல்லாது **'தூய கரங்கள் - தூய நகரம்'** என்ற தொனிப் பொருளில் இம்முறை உள்ளூராட்சித்தேர்தலை எதிர்கொள்கின்ற நாம் புலம்பெயர் தமிழ் உறவுகளின் நிதி உதவியுடன் தாயகத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள காத்திருக்கின்றோம். தமிழர் அரசியலில் புதிய இரத்தத்தினை பாய்ச்சி, புதிய சிந்தனையுடன் நமக்கான அரசியலை முன்னெடுக்க எம்மோடு இணைந்து எமது கரங்களை பலப்படுத்த எமக்கு வாக்களிக்குமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

**அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ்த் தேசிய மக்கள் முன்னனி, சம உரிமை இயக்கம் மற்றும் நம்பிகள் நல்வாழ்வுக் கழகம்** என்பவற்றின் கூட்டான தமிழ் தேசியப் பேரவைக்கு வாக்களித்து எமக்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கித்தான் பாருங்கள்.



நன்றி

கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம்
(தலைவர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி)



**அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சின்னத்தில்**
**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன்**
**தமிழ்த் தேசியப் பேரவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தீர்வு முயற்சி: காலம் பிந்திய பயிரா?

*"புதிய அரசமைப்பு உருவாக்க நடவடிக்கைகள் இனிமேலும் தாமதப்படுத்தலாகா. உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் முடிந்த பின்னர் இந்த நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டு புதிய அரசமைப்பு வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, பின்னர் அது சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களின் அங்கீகாரத்துடன் நிறைவேற்றப்பட வேண்டும். இந்த நடவடிக்கை இதற்கு மேலும் காலதாமதமடைய விட முடியாது. இலங்கையின் நீண்ட காலத் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில் இந்த விடயம் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டும்.*

*"இத்தகைய விடயங்களில் அரசு முன்னுரிமை செலுத்தி தனது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியமும் சர்வதேசமும் தனது செல்வாக்கை இலங்கை மீது செலுத்த வேண்டும்."*

- இவ்வாறு கோரியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் அரசியல் பிரிவுத் தலைவரை நேற்று தமது எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்துப் பேசிய போதே இந்த வற்புறுத்தலை இரா.சம்பந்தன் விடுத்திருக்கின்றார்.

'பருவத்தே பயிர் செய்' என்பர். எந்த விடயமும் அதற்குரிய காலத்தில் செய்யப்பட வேண்டும். காலம் பிழைத்தால் எல்லாமே பிழைத்து விடும்.

புதிய அரசமைப்பு முயற்சிக்கான காலமும் கடந்து விட்டதாகவே அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

அதனை தமது நேற்றைய சந்திப்பில் சம்பந்தனும் கோடி காட்டத் தவறவில்லை.

*"அரசாங்கத்தின் மந்த கதியிலான செயற்பாடுகள் தமிழ் மற்றும் சிங்கள மக்கள் மத்தியிலும் உள்ள கடும் போக்காளர்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உந்துசக்தியாக அமைகின்றது."* - என்ற குற்றச்சாட்டை இச்சந்திப்பில் சம்பந்தன் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

புதிய அரசமைப்பு உருவாக்குவது நல்லாட்சி அரசின் பிரதான இலக்கு - முக்கிய திட்டம். அப்படிக் கூறித்தான் இந்த அரசு ஆட்சிக்கு வந்தது.

ஆனால், புதிய அரசு பதவிக்கு வந்து - புதிய ஜனாதிபதி பொறுப்பேற்று - மூன்று வருடங்கள் முடிவடைந்து விட்டன. தற்போதைய ஜனாதிபதியின் இந்தப் பதவிக் காலம் இன்னும் 22 மாதங்கள் மட்டும்தான்.

இதற்கிடையில், புதிய அரசமைப்புக்கான முயற்சிகளை நகர்த்துவதற்கான காலமும் போதுமானதாகத் தென்படவில்லை. அரசியல் சூழலும், களவமைவும் கூட தோதானதாகப் படவில்லை.

சம்பந்தர் சொல்லுகின்றமை போல கடும் போக்காளர்களின் செயற்பாடுகள் சிங்கள மக்கள் மத்தியில் மட்டுமல்லாமல் தமிழ் மக்கள் மத்தியிலும் தீவிரமடைந்து வருகின்றன என்பது உண்மைதான்.

தெற்கில் - சிங்களவர்கள் மத்தியில் - மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியினர் மற்றும் கடும்போக்கு சிங்கள, பௌத்த அமைப்புகளை சம்பந்தன் கோடி காட்டுகின்றார் என்பது புரிந்துகொள்ளக் கூடியதே.

தெற்கில் மீள எழுச்சி பெற்று வரும் கூட்டு எதிரணியினரின் - மஹிந்த ராஜபக்ஷ தரப்பினரின் - செல்வாக்கு, புதிய அரசமைப்பு முயற்சிக்குப் பெரும் சவால் என்பது புரிந்துகொள்ளத்தக்கதே. அது வெளிப்படையானது, எல்லோருக்கும் தெரிந்த சமாச்சாரம்.

ஆனால், தமிழ்த் தரப்பிலும் கடும் போக்காளர்களின் செயற்பாடுகள் தீவிரமடைந்து வருவதற்கு அரசமைப்பு விடயத்தில் அரசின் காலதாமதம் உந்து சக்தியாக இருக்கின்றது என சம்பந்தன் குறிப்பிடுகின்றார் எனின், அந்தத் தரப்பு யாது?

தமிழர் தரப்பில் கடும் போக்காளர்கள் என்று யாரை அவர் குறிப்பிடுகின்றார்? நிச்சயமாக இந்தத் தேர்தலில் தமது கூட்டமைப்புத் தரப்பில் இருக்கும் தமிழரசுக் கட்சி, புளொட், ரெலோ, ஜனநாயகப் போராளிகள் கட்சி போன்றவற்றை அல்ல என்பது உறுதி. தேசியக் கட்சிகளையோ அல்லது ஈ.பி.டி.பியையோ அல்ல என்பதும் புரிந்து கொள்ளத்தக்கதே.

அப்படியாயின், வடக்கு முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் பேரவை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழர் விடுதலைக் கூட்டணி, புதிய ஜனநாயகத் தமிழரசுக் கட்சி போன்றவற்றைத்தான் அவர் கடும் போக்காளர்கள் என்று குறிப்பிடுகின்றார் என்று அர்த்தம் கொள்வது தப்பன்று.

தீர்வு முயற்சிகளின்போது தென்னிலங்கையுடன் தமது பேரம் பேசும் ஆற்றலை ஓரளவுக்கேனும் வலிமையாக சம்பந்தன் தக்க வைத்திருக்கின்றமைக்கு அவரின் பக்கத்திலும் - தமிழர் தரப்பிலும் - இத்தகைய கடும் போக்காளர்கள் இருக்கின்றமை அவசியமே. அது பேரம் பேசும் மேசையில் அவர் விடாப்பிடியாக நிற்பதற்கு அவருக்கு வலுவான காரணியாகவும் - உந்துசக்தியாகவும் - கூட இருக்கும்.

ஆனாலும், காலம் பிழைத்த பயிரை இனிமேல் வளர்த்து, ஒப்பேற்றி அவர் பயனை எவ்வாறு எட்டப் போகின்றார் என்பது தான் பிரதான கேள்வி.

வெற்றிகரமாக ஒப்பேற்றுவார் எனின் அவர் சரித்திரத்தில் இடம் பெறுவார், இல்லையேல் பெயரிழப்பார்.

# பனிக்கன்குள உள்ளக வீதிகள் தற்காலிகமாகப் புனரமைப்பு



முல்லைத்தீவு, ஜன. 24

பனிக்கன்குளத்தில் சுமார் 4 கிலோமீற்றர் உள்ளக வீதிகள் தற்காலிகமாகப் புனரமைக்கப் படவுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராமங்களின் உள்ளக வீதிகள் பன்நெடுங்காலமாகப் புனரமைப் பின்றிக் காணப்படுகின்றமையால் மக்கள் மிகவும் சிரமப் படுகின்றனர்.

இந்த நிலையில், பனிக்கன்குளம் கிராமத்தின் உள்ளக வீதிகளும் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு மேலாகதிருத்தப்படாது காணப்பட்டன.

இந்த நிலையில், கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கோரிக்கைக்கமைவாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையினரால் புதுக்குடியிருப்பு பிரதேச சபை ஒலுமடு உப அலுவலகத்தினூடாக அந்தக் கிராமத்தில் காணப்பட்ட சுமார் 4 கிலோமீற்றர் வீதிகள் கனரக இயந்திரங்கள் மூலம் தற்காலிகமாகப் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்த நடவடிக்கைக்கு நன்றி தெரிவிக்கும் மக்கள், இந்த வீதிகளை விரைவில் நிரந்தரமாகப் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றனர்.

இதேவேளை, அண்மைய நாள்களில் குறித்த பிரதேச சபையால் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பல்வேறு கிராம உள்ளக வீதிகள் கனரக இயந்திரங்கள் மூலம் தற்காலிகமாகப் புனரமைப்புச்செய்யப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க)

# ரூ.100 கோடி நஷ்டஈடு கோரும் அநுர குமார!



கொழும்பு, ஜன. 24

தன்னை அவமதிக்கும் வகையில் கருத்துத் தெரிவித்தமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு எதிராகத் தலா 100 கோடி ரூபா நஷ்டஈடு கோரி மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தொடர்ந்தும் செயற்பட்டு வருகிறார் என அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கறிஞர் சுனில் வடகல ஊடாக இந்த முறைப்பாடு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

# இந்திய மீனவர்கள் 98 பேரை வார இறுதியில் விடுவிக்க ஏற்பாடு

எல்லை மீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டின் பேரில், கடந்த வருட இறுதியில் சிறைப்பிடிக்கப்பட்ட 98 இந்திய மீனவர்களை இந்த வார இறுதியில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவர்கள் உள்ளிட்ட 113 பேர் இது வரையில் இலங்கை சிறையில் இருக்கின்றனர் என கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களம் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

எல்லை மீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டின் பேரில், இதுவரையில் 113 இந்திய மீனவர்கள் இலங்கை சிறையில் உள்ளனர். அவர்களில் 98 பேர் இவ்வார இறுதியில் விடுதலை செய்யப்பட சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவர்கள் அனைவரும் காங்கேசன்துறை, யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித்துறையை அண்மித்த கடற்பரப்பில் எல்லை மீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களாவர்.

மேலும் இந்த மாதத் தொடக்கத்தில் 69 பேர் விடுதலை செய்யப்பட்டனர், இன்னும் 16 பேர் இக்குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்டோர் சிறைச்சாலைகளில் உள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தேசிய நீர்வழங்கல் சபை ஊழியர்கள் வேலைநிறுத்த போராட்டத்துக்கு முஸ்தீப்பு

கொழும்பு, ஜன.24

இந்த வருடத்துக்கான சம்பள உயர்வு தொடர்பான அறிவிப்பை உடனடியாக வெளியிடாது போனால் தாங்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட உள்ளனர் என நீர்வழங்கல் சபை ஊழியர்கள் அறிவித்துள்ளனர்.

தேசிய நீர்வழங்கல் சபையின் ஊழியர்களுக்கு மூன்று வருடத்திற்கு ஒருமுறை கட்டாய சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டிய நிலையில் கடந்த ஆறு மாதங்களாக அந்தச் சம்பள அதிகரிப்பு தாமதிக்கப்பட்டுள்ளது.

அதனை எதிர்வரும் பெப்ரவரி மாதத்திற்குள் வழங்குவதாக அறிவிக்காது போனால் பெப்ரவரி இரண்டாம் திகதி தொடக்கம் மேல்மாகாணத்தின் அனைத்து அலுவலகங்களிலும் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளனர் என ஊழியர் சங்க முக்கியஸ்தர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் பெப்ரவரி 07ஆம் திகதி நாடளாவிய ரீதியில் அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளவும், அதன் பின்னரும் சம்பள அதிகரிப்பு அறிவிக்கப்படாது போனால் நாடளாவிய ரீதியில் தொடர் வேலைநிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளப் போவதாகவும் ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

## நாளை

25.01.2018
வியாழக்கிழமை
நட்சத்திரம்: பரணி பி.இ.3.43வரை
திதி : அட்டமி மு.ப. 11.03வரை
சுபநேரம் : 8.06 – 9.36
இராகுகாலம்: 2.06 – 3.36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir



# பிணைமுறி விவகாரத்துடன் தொடர்புடைய சகலருக்கும் தண்டனை வழங்கி சட்டத்தை நிலைநாட்ட வேண்டும்!




மத்திய வங்கி பிணை முறி விவகாரத்துடன் தொடர்புடைய சகலருக்கும் தண்டனை வழங்கி சட்டத்தை நிலைநாட்ட வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இந்த முயற்சியில் தமது கரங்களைப் பலப்படுத்த ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதமின்றி சகலரும் தமக்கு உதவி செய்யவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாம் எப்போதும் ஊழல் மோசடிகள், களவு, கொள்ளை, வீண்விரயம், ஏகாதிபத்தியம், குடும்ப ஆட்சி போன்றவற்றுக்கு எதிராகச் செயற்படுகிறோம்.

முன்னாள் ஜனாதிபதி நல்லாட்சி அரசை விமர்சித்து தம்முடன் இணைந்து கொள்ளுமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கிறார். அவர் மூன்று தடவைகள் தோல்வி கண்டவர் என்பதை அவரே மறந்து விட்டார்.

தமது பதவிக் காலம் முடிவடைவதற்கு இரண்டு ஆண்டுகள் எஞ்சியுள்ள நிலையில் ஜனாதிபதி தேர்தலை நடத்தினார். சர்வதேச சவால்களில் இருந்தும், அதிக கடன் பளுவில் இருந்தும் தப்பிப்பது முன்னாள் ஜனாதிபதியின் நோக்கமாக இருந்தது.

மத்தியவங்கி அறிக்கை குறித்து மேடைகளில் உரத்துக் குரல் கொடுக்கும் முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் நிதியமைச்சருக்கு எதிரான அரசியல் குற்றவியல் பிரேரணை மீது வாக்களிக்க நாடாளு மன்றத்திற்கு வரவில்லை.

ஆனால், நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறியவுடன் முன்னாள் நிதியமைச்சருக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு வாழ்த்துத் தெரிவித்தார்.

மத்திய வங்கி பிணை முறி அறிக்கை பற்றி பலர் பலவிதமாகக் கூறினாலும், 2008 ஆம் ஆண்டு தொடக்கம் ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

ஆனால், நாடு பிளவுபடுவதாகவும், விற்கப்படுவதாகவும் கூறும் முன்னாள் ஜனாதிபதி, கொழும்பு துறைமுக நகருக்காக 240 ஏக்கர் காணியை சீன நிறுவனம் ஒன்றுக்கு முற்றுமுழுதாக விற்றுவிட தீர்மானித்தார். சமகாலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மாத்திரமே தூய்மையான அரசியல் இயக்கத்திற்கான உரிமையைக் கொண்டுள்ளது என்றும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார். (க)

## 5 பாடசாலைகளுக்கு விடுமுறை

கொழும்பு, ஜன. 24

க.பொ.த. சாதாரண தர பரீட்சையின் இரண்டாம் கட்ட விடைத்தாள் திருத்தும் பணிகள் நேற்றைய தினம் ஆரம்பமாகியுள்ள நிலையில், 5 பாடசாலைகள் மூடப்படவுள்ளன என கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

விடைத்தாள் திருத்தும் பணிகளுக்காக மத்திய நிலையங்களாக பயன்படுத்தப்படும் 5 பாடசாலைகள் நேற்றைய தினம் முதல் எதிர்வரும் 2ஆம்திகதி வரை முழுமையாக மூடப்படவுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கொழும்பு சீ.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கர வித்தியாலயம், மாத்தறை மத்திய கல்லூரி, குருநாகல் கண்டி புனித அந் தோனியார் மகளிர் கல்லூரி மற்றும் பதுளை ஊவா மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் மூடப்படவுள்ளன என கல்வியமைச்சு கூறியுள்ளது.

## ஒரு லட்சத்து 37 ஆயிரம் பேர் தொற்றாத நோயினால் உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 24

கடந்த வருடத்தில் (2017) இருதய நோய் உட்பட தொற்றாத நோய்களினால் இலங்கையில் ஒரு லட்சத்து 37 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

தவறான வாழ்க்கைப் பழக்கங்கள், உடற்பயிற்சி இன்மை என்பன இவ்வாறான தொற்றாத நோய்களுக்கு காரணமாகும் எனவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த உயிராபத்திலிருந்து காப்பதற்கு சமூக சிந்தனை மாற்றமொன்று கட்டியெழுப்பப்பட வேண்டும் எனவும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

## கல்வித்துறை பிரச்சினைகள் குறித்து கண்காணிக்க ஆணைக்குழு தேவை

### விரிவுரையாளர்கள் குழு கோரிக்கை

கல்வித்துறைக்கான கோரிக்கைகள் மற்றும் கல்வித் துறையில் முகம்கொடுக்க நேர்ந்துள்ள பிரச்சினைகள் குறித்து கண்காணிப்பதற்காக ஆணைக்குழுவொன்றை நிறுவுமாறு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளனர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் 66 பேரால் கையொப்பமிடப்பட்ட மனுவொன்றின் மூலம் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பில் அரசு முன்வைத்துள்ள யோசனைகளை தாம் முற்று முழுதாக நிராகரிக்கின்றோம் எனவும் உயர்கல்வியை தனியார் மயப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் எனவும் அந்த விரிவுரையாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## இளைஞர் கழக உறுப்பினர்களுக்கு நேர்முகத் தேர்வு

மன்னார் மாவட்டத்தில் இளைஞர் கழகங்கள் ஊடாக இளைஞர், இளம் பெண்களை வெளிநாட்டு தலைமைத்துவப் பயிற்சி சுற்றுப் பயணம் என்பவற்றுக்கு அழைத்துச் செல்வதற்கான நேர்முகத் தேர்வு நாளை 25 ஆம் திகதி இடம்பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட இளைஞர் கழக உறுப்பினர்களுக்கே இந்தச் சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. இவ்வாறு பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழக உறுப்பினர்கள் நாளை காலை 9 மணியளவில் மன்னார் தேசிய இளைஞர் சேவை மன்றத்துக்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## மத்திய வங்கி பிணைமுறி அறிக்கையில் எந்தப் பக்கங்களும் மறைக்கப்படவில்லை!

### அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 24

மத்திய வங்கி பிணை முறி அறிக்கையில் எந்தப் பக்கங்களும் மறைக்கப்படவில்லை. ஆணைக்குழு சரியாக தமது அறிக்கையை வழங்கியுள்ளதுடன் முழுமையாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தெரிவித்துள்ளது.

ரவி கருணாநாயக்க எம்.பி விசேட உரை நிகழ்த்தியும் எந்தப் பயனும் இல்லை. கள்ளர்கள் யார் என்பது மக்களுக்கு நன்றாகவே தெரியும் எனவும் அந்தக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கட்சி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே கட்சியின் முக்கியஸ்தர் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மத்திய வங்கி பிணைமுறி அறிக்கையில் பக்கங்களை மறைத்துள்ளதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு பொய்யானது. ஜனாதிபதி ஆணைக்குழு தயாரித்த அறிக்கையின் சகல பிரதிகளும் முழுமையாக நாடாளுமன்றத்தில் வழங்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற இணையதளத்திலும் பதிவேற்றப்பட்டுள்ளது. அவ்வாறு இருக்கையில் அறிக்கை பொய்யானது எனக் கூறவோ அல்லது மறைக்கப்பட்டது எனக் கூறவோ முடியாது.

அத்துடன், ஜனாதிபதி ஆணைக்குழு மிகச் சரியாக தமது கடமைகளை நிறைவேற்றியுள்ளது. அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காரணிகள், சாட்சியங்கள் என்பன அனைத்துமே மிகவும் முக்கியமானவையாகும்.

அவ்வாறு இருக்கையில் அறிக்கையை முழுமையாக வாசிக்காத நபர்கள் மூலமாக முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மூலமாக குறித்த விடயங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சட்ட ரீதியில் சரியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எதோ விசேட உரை நிகழ்த்தி இந்த விடயங்களை வெளிப்படுத்தவுள்ளார் என கூறுகின்றனர்.

அவர் கூறும் உரை என்னவென்பது எமக்குத் தெரியாது. எவ்வாறு முன்வைத்தாலும் அதில் பிரயோசனமும் இல்லை. அவர் எதைக் கூறினாலும் அதனால் மக்கள் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளப் போவதில்லை. உண்மையான கள்ளர்கள் யார் என்பது அனைவருக்குமே தெரியும். மக்கள் நன்றாக தெரிந்துள்ளனர். ஆகவே மக்களை ஏமாற்ற முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பாதாள உலகக்குழு செயற்பாட்டாளர்கள் இந்த அரசாங்கத்தில் இருக்கின்றார்கள்

### மனோ கணேசன் கூறுகிறார்

இந்த அரசில் பாதாள உலகக் குழு செயற்பாட்டாளர்கள் இருக்கின்றார்கள் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

போதைப் பொருள் கடத்தல்கள் மற்றும் பாதாள உலகக்குழு செயற்பாட்டாளர்கள் இந்த அரசில் அங்கம் வகிக்கின்றார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசின் பயணத்தைத் தடுத்து நிறுத்த இந்தத் தரப்பினருக்கு இடமளிக்கப்படமாட்டாது.

நல்லிணக்கம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட அனைவருக்கும் பாடம் நடத்தத் தயார்.

எவரேனும் இந்த அரசை ஐக்கிய தேசியக் கட்சி அல்லது சுதந்திரக் கட்சி அரசு என்று கூறினால் அது முட்டாள்தனமானது. ஏனெனில், இந்த அரசை உருவாக்க நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டிருந்தோம் என்றும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பு மிக விரைவில் சிதறிப் போய்விடும் நிலை!




மட்டக்களப்பு,ஜன.24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிக விரைவில் முற்றுமுழுதாகச் சிதறிப் போய் விடுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. சம்பந்தன் ஐயாவுக்கு வயது போய்விட்டது.

–இவ்வாறு கூறுகிறார் கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாய மூர்த்தி முரளிதரன்.

தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் சார்பில் மட்டக்களப்பு தென் எருவில் பற்று பிரதேச சபைக்கு போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் கட்சி அலுவலகம் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இங்கு அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

தொப்பிக்கல காட்டில் நான் இருந்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உண்மையிலே நான்தான் உருவாக்கினேன். யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருந்தது, நாம் அழிவுகளைச் சந்தித்துக் கொண்டிருந்தோம், இது வெளி உலகத்திற்குத் தெரிய வந்தது. பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிடம் எடுத்துக்கூறி கிளிநொச்சியிலே வைத்து எமக்குரிய ஒரு அரசியல் பிரதிநிதிகளாக இந்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்க வேண்டும் என்றுதான் அதை உருவாக்கினோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இருக்கும் வரைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிறப்பாகத்தான் இயங்கியது. ஆனால், போராட்டங்கள் நிறுத்தப்பட்டதன் பிற்பாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைகளில் பெரிய மாற்றங்களும், அவர்களின் போக்குகளிலும் மாற்றங்களும் காணப்படுகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளே போட்டிகள், பொறாமைகள், காரணமாக அக்கூட்டமைப்பை இன்னும் பதிவு செய்யவில்லை.

நான் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இருந்தாலும் சந்தர்ப்பங்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்தத் தேசியக் கட்சியில் நான் ஒருபோதும் வாக்குக் கேட்டு வரவில்லை, சிங்களக் கட்சியில் வாக்குக் கேட்பது எனது நோக்கமல்ல.

அதனை நான் ஒரு கொள்கையாகவே வைத்திருந்தேன். அவ்வாறு மக்களிடம் வாக்குப் கேட்ப தாயின் தமிழ் கட்சி ஒன்று அமைத்து அதனூடாகத்தான் வரவேண்டும் என நினைத்திருந்தேன். இந்நிலையில்தான் கடந்த வருடம் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி என்ற ஒரு கட்சியை ஆரம்பித்தேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முற்றுமுழுதாகச் சிதறிப் போவதற்கு வாய்ப்பிருக்கின்றது. ஏற்கனவே கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் விலகிவிட்டனர், சம்பந்தன் ஐயாவுக்கும் வயது போய்விட்டது.

இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ஒரு போதும் ஒற்றுமையில்லை. வடக்கு, கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்திற்கு ஓர் உறுதியான கட்சி வேண்டும் என்பதற்காகத் தான் இந்த தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி என்கின்ற கட்சியை ஆரம்பித்துள்ளோம்.

எமது கட்சியின் நோக்கங்களாக முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதாரம் அளிக்கப்பட வேண்டும், வடக்கு கிழக்கில் யுத்தத்தினால் கணவனை இழந்த கிட்டத்தட்ட 80ஆயிரம் விதவைப் பெண்கள் உள்ளார்கள், அவர்களுக்கு உதவ வேண்டும். தமிழர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

கிழக்கு மாகாணத்திற்கு ஒரு தமிழனை முதலமைச்சராக்க வேண்டும். அதற்குரிய அத்திபாரத் தேர்தல்தான் இது, இதில் நாங்கள் தவறைவிட்டோமாக இருந்தால், கிழக்கு மாகாணம் மீண்டும் முஸ்லிம்களின் கையில்தான் போகும். இதனைத் தடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (ப)

## வாகன விபத்தில் இருவர் படுகாயம்; சாரதி கைது



ஏறாவூர்,ஜன.24

ஏறாவூர் - புன்னைக்குடா வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ள நிலையில் படுகாயங்களுக்கு உள்ளாகியவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஜீப் வாகனமொன்று டன் ஓட்டோவுடன் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது எனவும் இதன்போது ஓட்டோ சாரதியும் அதில் பயணித்த பயணிகளுமே படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த நிலையில், ஜீப் வாகனத்தைச் செலுத்திச் சென்றவர் கைது செய்யப்பட்டு வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆசிய அபிவிருத்தி வங்கித் திட்டத்தில் கல்முனைக்கு ரூ.190 கோடி ஒதுக்கீடு

### ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர்

கல்முனை,ஜன.24

கல்முனைத் தொகுதியில் பெரிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 190 கோடி ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது என விளையாட்டுத்துறை பிரதி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

இந்த அபிவிருத்திப் பணிகள் யாவும் உள்ளூராட்சித் தேர்தல் முடிந்த கையோடு ஆரம்பிக்கப்பட உள்ளன. அவை எதிர்வரும் 2020ஆம் ஆண்டுக்குள் நிறைவடையும். அவற்றை நிறைவேற்றாமல் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலுக்கான நகர்வுகளை முன்னெடுக்க மாட்டேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அம்பாறையில் இடம்பெற்ற தேர்தல் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நல்லாட்சி மலர அதி உச்ச ஆதரவை வழங்கிய கல்முனை மக்களை கௌரவிக்கும் நோக்கில் கல்முனை – சம்மாந்துறை இணைந்த புதிய நகர அபிவிருத்தித் திட்டத்துக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் அமைச்சுக்கு வரவு – செலவுத் திட்டத்தினூடாக 200 கோடி ரூபா ஒதுக்கப்பட்டு, மொரட்டுவ பல்கலைக்கழகத்தினூடாகத் திட்டங்கள் வரையப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த நிலையில், இதற்கு மேலதிகமாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் இரண்டாம் நிலை நகரங்களின் நிலைத்தகு அபிவிருத்தித் திட்டத்தில் எமது கல்முனை மாநகர சபையும் உள்வாங்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் அந்த வங்கியின் 190 கோடி ரூபா நிதியுதவியுடன் கல்முனையில் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நாடு முழுவதும் 25 உள்ளூராட்சி மன்றங்கள் ஆசிய அபிவிருத்தி வங்கி திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அம்பாறை மாவட்டத்தில் கல்முனை மாநகர சபை மட்டுமே இத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துள்ளார். (ப)

# தக்காளிச் செடிகளுக்குள் கஞ்சா வளர்த்தவருக்கு விளக்கமறியல்

திருகோணமலை,ஜன.24

திருகோணமலை – சேருநுவர பகுதியில் தக்காளிச் செடிகளுக்குள் ஐந்து கஞ்சாத் தாவரங்களை வளர்த்து வந்த நபரை நாளை 25 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் மூதூர் நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.


சம்பவம் தொடர்பில் வெருகல், மாவடிச்சேனை பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் வீட்டில் மறைமுகமாக தக்காளிச் செடிக்குள் ஐந்து கஞ்சா தாவரங்களை வளர்த்து வந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ப)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சு.க. அமைச்சர்களுக்கு எதிராக குற்றச்சாட்டு; ஆவணங்களுடன் தயாராகிறது ஐ.தே.கட்சி!



கொழும்பு, ஜன. 24

சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் 10 பேர் மற்றும் ஒரு முதலமைச்சருக்கு எதிரான ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுகள் தொடர்பான ஆவணங்களை, ஐ.தே.கவின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் கையளிக்கவுள்ளனர்.

கூட்டு அரசில் இடம்பெற்றுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐதேகவுக்கும் இடையிலான பனிப்போர் தீவிரமடைந்துள்ளது.

ஐ.தே.கவை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் தாக்கி வருகின்றனர். ஐ.தே.கவினர் ஜனாதிபதி மைத்திரி மீதும் தனிப்பட்ட விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

இதனால், அரசுக்குள் குழப்பம் ஏற்பட்ட நிலையில், ஜனாதிபதி மைத்திரிக்கு எதிரான விமர்சனங்களை நிறுத்துமாறு ஐ.தே.கவினருக்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டிருந்தார்.

எனினும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் ஐ.தே.கவினரை திருடர்கள் என்று விமர்சித்து வரும் நிலையில், ஐ.தே.கவின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள், சுதந்திரக் கட்சி முக்கிய தலைவர்களின் ஊழல் மோசடிகள் தொடர்பான ஆவணங்களுடன் ஜனாதிபதி மைத்திரியைச் சந்திக்கவுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் 10 அமைச்சர்கள் மற்றும் ஒரு முதலமைச்சர் தொடர்பான ஆவணங்கள் ஜனாதிபதியிடம் கையளிக்கப் பட உள்ளன. என்று ஐ.தே.கவின் பின் வரிசை நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

முன்னைய ஆட்சிக்காலத்தில் அமைச்சர்களாக இருந்த போது, சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் செய்த மோசடிகள், ஊழல்கள் தொடர்பான ஆவணங்கள் தம்மிடம் உள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

தற்போதும் இந்த அமைச்சர்களின் ஊழல்கள் தொடர்கின்றன எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன், இந்த ஆவணங்களைத் தாம், இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவிடமும் கையளிக்கவுள்ளார் எனவும் சமிந்த விஜேசிறி கூறியுள்ளார்.

## ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு பாராட்டு




கொழும்பு, ஜன. 24

சிறுவர் துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்த தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைமுன்னெடுக்கும்வேலைத் திட்டத்தை ஐக்கியநாடுகள் சபை பாராட்டியுள்ளது.

சமீபத்தில் சுவிற்ஸர்லாந்தின் ஜெனீவா நகரில் ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் குழு தொடர்பான கூட்டம் நடைபெற்றது.

இதில் ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கையின் திட்டத்தை வரவேற்றுப் பேசினார்கள்.

இந்தக் கூட்டத்தில் தெருவில் வாழும் பிள்ளைகளுக்கான விசேட வேலைத்திட்டங்கள், சிறுவர் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக குடும்பக் கட்டமைப்பை உறுதிமிக்கதாக மாற்றுதல், விழிப்புணர்வுத் திட்டங்களை முன்னெடுத்தல் போன்றவை பற்றி கூடுதல் கவனம் செலுத்தப் பட்டன.

(க)

### பதுளை அதிபர் விவகாரம்:

## அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்விஅமைச்சர் கோரிக்கை

கொழும்பு, ஜன. 24

பதுளை தமிழ் மகளிர் வித்தியாலய அதிபரை முழந்தாழிடக் கூறியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பிலான விடயங்களைகண்டறிந்து அறிக்கை வழங்குமாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சிக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

மாகாண கல்வி தலைமை அதிகாரி மற்றும் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபரின் செயற்பாடுகளில் முதலமைச்சர் கல்வி அதிகாரிகளுக்கு ஏதேனும் அழுத்தங்களை மேற்கொண்டிருப்பாராயின் அது தொடர்பிலான விடயங்களைக் கண்டறிந்து உடனடியாக அறிக்கை வழங்குமாறு கல்வி அமைச்சர் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அதிபர் ஆரம்பத்தில் குறிப்பிட்ட சம்பவத்தை நிராகரித்தமையுடன் இது ஏதேனும் அரசியல் ரீதியிலான சம்பவமாக காணப்பட்ட போதிலும் தற்பொழுது முன்வைக்கப் பட்டவிடயங்களின் அடிப்படையில் உடனடியாக இந்த சம்பவம் தொடர்பில் அறிக்கை ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு தேவை ஏற்பட்டிருப்பதாக கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.




இந்தச்சம்பவத்தின் உண்மை நிலையை மூடிமறைப்பதில் தலையீடுகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் ஏனையகல்விமுக்கியஸ்தர்கள், குறிப்பிட்ட சம்பவத்தில் செயற்பட்டமுறைமை குறித்து கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சர் அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

(க)

## குருநாகல் – தம்புள்ளை வீதியில் வாகன விபத்து

### இரு பெண்கள் உட்பட நால்வர் படுகாயம்



குருநாகல், ஜன. 24

குருநாகல் - தம்புள்ளை பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தம்புள்ளை - குருநாகல் பிரதான வீதியில் கொக்கரல்ல என்ற இடத்தில் வான் ஒன்று மரமொன்றுடன் மோதியதில் வாகனச் சாரதி உட்பட வானில் பயணித்த நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

கட்டுநாயக்கா விமான நிலையம் சென்று திரும்பும் வழியில் இவ்விபத்து ஏற் பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் முள்ளிப் பொத்தானை பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

சாரதிக்கு தூக்க மயக்கம் ஏற்பட்டதால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். சாரதி உட்பட காயமடைந்த நால்வரும் தம்புள்ளை வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் இருவர் பெண்களாவர். கொக்கரல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மீனவர்கள், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் மட்டுப்படுத்தப்படவில்லை




கொழும்பு, ஜன. 24

இலங்கை மண்ணெண்ணெய் வீண்விரயமாவதைத் தடுப்பதற்காக விடுக்கப்பட்ட சுற்றறிக்கை குறித்த பொய்யான கருத்துக்களை நம்ப வேண்டாமென்று பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பொது மக்களைக் கேட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனங்களுக்கும், தொழிற் சாலைகளுக்கும், வள்ளங்களுக்கும் இலங்கை மண்ணெண்ணெயை மொத்தமாக விநியோகிப்பதற்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

சிலர் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் கூடுதலாக மண்ணெண்ணெயைக் கொள்வனவு செய்து முறையற்ற விதத்தில் இலாபம் சம்பாதிப்பதை தடுப்பது இந்த சுற்றறிக்கையின் நோக்கமாகும்.

எவ்வாறேனும், இதன் மூலம் மீனவ சமூகத்திற்கோ, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கோ மண்ணெண்ணெய் விநியோகம் மட்டுப்படுத்தப்படவில்லை என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

மண்ணெண்ணெய் நிவாரணத்தை தவறாகப் பயன்படுத்தி முறையற்ற விதத்தில் இலாபம் சம்பாதிப்பதை அனுமதிக்க முடியாதென்றும் கூட்டுத்தாபனம் வலியுறுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தேர்தல் வாக்குச் சாவடி எழுதுநர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு திங்களன்று

யாழ்ப்பாணம், ஜன.24

தேர்தல் வாக்குச் சாவடியில் எழுதுநர்களாகக் கடமையாற்றவுள்ளவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாண பிரதேச செயலக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது கடமையில் ஈடுபடவுள்ள அரச அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் தேர்தல் வாக்குச் சாவடியில் எழுதுநர்களாகக் கடமையாற்றவுள்ளவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கின் ஒரு பகுதியே எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (இ)

## அனைவரும் ஒத்துழைத்தால் யாழ்.நகரை சுகாதாரம், தூய்மையுடன் வைத்திருக்கலாம்

### மக்களை அன்புரிமையுடன் கேட்கிறார் ஆணையாளர்



யாழ்ப்பாணம்,ஜன.24

வரலாற்று பாரம்பரிய பெருமைமிக்க எம் யாழ் மாநகரசபை நகரமாக இருப்பதா? அல்லது நரகமாக மாறுவதா? என்பது உங்கள், எங்கள் ஒவ்வொருவரினதும் கைகளிலேயே தங்கியுள்ளது. நாம் எல்லோரும் ஒருங்கிணைந்து பொறுப்புணர்வுடன் திண்மக் கழிவு முகாமைத்துவத்தில் ஈடுபடுவதாலேயே மாநகர அழகு, தூய்மை, சுகாதாரம், அபிவிருத்தி என்பன விரைவில் சாத்தியமாகும். எனவே உங்கள் ஒவ்வொருவரினதும் ஒத்துழைப்பை நாடி நிற்கின்றோம்.

- இவ்வாறு யாழ்.மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் நகர மக்களிடம் அன்புரிமையுடன் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஆணையாளர் மக்களுக்கு விடுத்துள்ள முக்கிய சில அறிவுறுத்தல்கள், ஆலோசனைகள் வருமாறு:-

உங்கள் வீடுகளில் பயன்படுத்தப்படும் உக்கக்கூடியதும், சேதனப் பசளையாக்க கூடியதுமான, கணிசமான கழிவுகளை (குப்பைகள், கழிவுப்பொருள்களை) எரியூட்டுவதால் சூழல் மாசடைகின்றது எனவே எரியூட்டுவதைத் தவிர்த்து உங்கள் வீட்டுக்காணிகளிலேயே புதைத்து உங்கள் காணியின் மண்வளத்தை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

தொற்றுநோய் அபாயமுள்ள கழிவுகளை (பம்பஸ் போன்ற கழிவுகள்) பொது இடங்களில் வீசுவதை தயவுடன் தவிர்த்து பையினுள் இட்டு கட்டி வழங்கவும்.

உங்கள் வீடுகளிலுள்ள உக்க முடியாத திண்மக்கழிவுகளை தரம் பிரித்து வழங்கி எமது பணியாளர்களிற்கு உதவி செய்யுங்கள்.

தற்போது நாடு முழுவதும் தரம்பிரிக்கப்படாத திண்மக் கழிவுகளை உள்ளூராட்சி சபையால் பொறுப்பேற்பது தவிர்க்கப்பட்டுள்ளது.

பொது இடங்களில் பொறுப்பற்ற விதத்தில் தங்களது வீட்டுக் கழிவுகளை தரம் பிரிக்காது வீசுவதைத் தயவுடன் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

எம்மால் பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ள கழிவு அகற்றும் தொட்டிகளில் அறிவுறுத்தப்பட்டபடி தரம் பிரித்துப் போடுமாறு மக்களை கேட்டுக் கொள்கின்றோம்.

இறந்த விலங்குகள், இறைச்சிக்கழிவுகள் என்பவற்றை பொது இடங்களில் வீசுவதை தயவுடன் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

இலத்திரனியல் கழிவுகளை மாநகர சபையின் கழிவு சேகரிப்பு நிலையங்களில் ஒப்படைக்கவும். (இ)

## தினசரி ராசி பலன்
(24.01.2018)

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் தைத்திங்கள் 11 ஆம் நாள் புதன்கிழமை ஸப்தமித்திதி. மாலை 4.17 மணி வரை பின்னர் அஷ்டமி. நட்சத்திரம். ரேவதி காலை 8.34 மணி வரை பின்னர் அசுவினி. மரணயோகம் முழுவதும்.*

**ராகுகாலம்** *-பகல் 12.22 மணி முதல் 1.49 மணி வரை*

**சுபநேரம்** *- மாலை 5.06 மணி முதல் 6.36 மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *தை மாத வளர்பிறை ஸப்தமி.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *அசுவினி.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்**
ஆக்கபூர்வமான நாள். எதிர்பாராத நன்மை, குருட்டு அதிஷ்டம் தேடி வரும். வெளிநாடு செல்ல முயற்சித்தவர்களுக்கு சந்தர்ப்பம் அமையும். நீண்ட நாளாக தடைப்பட்ட காரியம் தடைகள் கடந்து நிறைவேறும்.

**ரிஷபம்**
துயரமான நாள். பணவரவு குறையும். வீண் அலைச்சல் உண்டாகும். மனதில் குழப்பம் உண்டாகும். செலவுகள் அதிகமாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் இருக்கும்.

**மிதுனம்**
யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். சிலருக்கு பூர்வீக சொத்துக்கள் நிலபுலன்கள் மூலம் பணவரவு ஏற்படும். சிலருக்கு புது வீடு வாங்கும் யோகம் உண்டாகும்.

**கடகம்**
சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் சுமாராக இருக்கும். வேலை, உழைப்பு, அலைச்சல் அதிகமாக இருக்கும்.

**சிம்மம்**
உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். சிலருக்கு நீண்ட நாளாக முயற்சித்த காரியம் கைகூடும். சிலர் புகுந்த வீடு குடிபோவார்கள். குடும்பத்தில் சிலர் திட்டமிட்ட காரியங்கள் நிறைவேறும்.

**கன்னி**
அலைச்சல் மிகுந்த நாள். அலைச்சல், அதிக உழைப்புடன் இருக்கும். சிலர் படித்து விட்டு வேலை தேடி அலைவார்கள். பணம் பற்றாக்குறையால் பணம் கடன் வாங்க அலைவார்கள்.

**துலாம்**
மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வரவு, செலவு சரியாக இருக்கும். குடும்பச் செலவு களைச் சமாளிக்க சிரமம் உண்டாகும். சிலருக்கு விருந்தினர், நண்பர் வரவால் செலவு அதிகரிக்கும்.

**விருச்சிகம்**
மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். முயற்சிகளில் வெற்றி கிட்டும். சிலருக்கு அயல் நாடு செல்லும் சந்தர்ப்பம் கனிந்து வரும். திருமணம் பற்றிய பேச்சுவார்த்தையால் நல்ல முடிவு கிடைக்கும்.

**தனுசு**
இனிமையான நாள். வருமானம் திருப்தியைத் தரும். பெரியமனிதர் உதவியால் சிலருக்கு முக்கிய காரியம் நிறைவேறும். சிலருக்கு புதுவீடு, காணி வாங்கும் சந்தர்ப்பம் அமையும்.

**மகரம்**
குழப்பமான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். மனதில் அதிருப்தி, குழப்பம் உண்டாகும். வியாபாரத்தில் பணியாட்களால் சிலருக்கு பிரச்சினை அதிகரிக்கும்.

**கும்பம்**
விருத்தியான நாள். நீண்ட காலமாக தடைப்பட்ட காரியம் நிறைவேறும். சிலருக்கு உத்தியோகத்தில் பதவி உயர்வு, ஊதிய உயர்வு ஏற்படும். சிலருக்கு புதுத்தொழில் சந்தர்ப்பம் கனிந்து வரும்.

**மீனம்**
அதிஷ்டமான நாள். தனலாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தர்கள் புதுப் பொறுப்பு, புது செல்வாக்கு என்று வலம் வருவார்கள். வியாபாரத்தில் புதிய முயற்சியால் வருமானம் கிடைக்கும்.

**சந்திராட்டமநாள்: அசுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.**

## மெய்வன்மைப் போட்டிகள்

குடத்தனை ஜன.24

குடத்தனை கரையூர் அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அதிபர் மு. கதிர்காமலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் பருத்தித்துறை கிளை முகாமையாளர் ஜோ. இன்பராஜ், சிறப்பு விருந்தினராக குடத்தனை வடக்கு கிராம உத்தியோகத்தர் பி.தனுசியா ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

* * * * *

சித்தன்கேணி ஜன.24

சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலய மெய்வன்மை போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் பா. பாலசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண சுவாமி விபுலானந்தர் அழகியல் கற்கைகள் நிறுவனத்தின் விரிவுரையாளர் நா.மாதவன் கலந்து கொள்வார். (இ)

## நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழன் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5மணி வரை-

**யாழ் பிரதேசத்தில்** - வாதரவத்தை, பொங்கணை, ஆவரங்கால் கிழக்கு, மணல் பகுதி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** -வியாழன் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை தாண்டிக்குளத்திலிருந்து சின்னவலயங்கட்டு வரை, மறக்கறம்பளையிலிருந்து மணிபுரம் வரை, முள்ளிக்குளம், கீரிசுட்டான், நொதேர்ண் பாம், ஆசிரியர் தொழில்நுட்பக்கல்லூரி புதுக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களம், சாந்தசோலை கிராமம், கொக்கிளிய, அக்போபுர, கோவில்குளம், ஆச்சிபுரம், சமணன்குளம், மகாமயிலங்குளம், மருதநகர், எல்லப்பமருதங்குளம், பெரியகூமரசங்குளம், ஆசிக்குளம், சிதம்பரபுரம் ஆகிய பிரதேசங்களிலும்

மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## ஆலய உற்சவங்கள்



யாழ்ப்பாணம்,ஜன.24

திருநெல்வேலி கிழக்கு ஸ்ரீபூதநாத சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை முற் பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ)

* * * * *

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ்ப்பாணம் வண்ணை மணிக்கூட்டு வீதி ஸ்ரீ அரசடி விநாயகர் ஆலய மஹோற்சவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முற்பகல் 11.15 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய வங்கி மோசடி தொடர்பில்

# பிரதமர் மீது பழி சுமத்திவிட்டு தப்பிக்க முயல்கிறார் மைத்திரி!



கொழும்பு, ஜன. 24

மத்திய வங்கி மோசடி தொடர்பில் பிரதமர் மீதும் ஐக்கிய தேசியக் கட்சியின் மீதும் பழி சுமத்திவிட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தப்பிக்க முயல்கிறார்.

எனினும், இந்த மோசடியுடன் ஜனாதிபதிக்கும் நேரடி தொடர்பு உள்ளது. அர்ஜுன மகேந்திரன் மற்றும் ரவி கருணாநாயக்கவின் நியமனங்களை ஜனாதிபதியே செய்தார்.

ஆகவே, ஜனாதிபதியால் தப்பிக்க முடியாது. இந்த விவகாரத்தில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று இருக்கின்றது என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவருமான ஜீ.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவியில் இருக்கும் வரை சுயாதீன விசாரணையொன்றை எதிர்பார்க்க முடியாது. மேலும், ஆணைக் குழுவின் அறிக்கை மீதான சட்ட நடவடிக்கையும் கனவாகவே மாறும். ஆகவே தற்காலிகமாக பிரதமரை பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பத்தரமுல்லை நெலும் மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான குற்றச்சாட்டுகள் வந்தவுடன் அதனை மூடி மறைப்பதற்கு பிரதமர் முயற்சி செய்தார். இதன்படி சிறி கொத்தாவில் உள்ளசட்டத்தரணிகள்கொண்ட குழு வொன்றை அமைத்து விசாரணை செய்தார்.

இவ்வாறு விசாரணை செய்தவர்களுக்கு மத்திய வங்கி விடயங்கள் தொடர்பில் போதியளவு அறிவு இல்லை. எனினும் இந்தக் குழுவை அமைத்து மோசடியை மூடி மறைக்க முயற்சி செய்தார்.

தற்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மத்திய வங்கியில் மோசடிகள் நடைபெற்றுள்ளன எனக் கூறினாலும் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்களை ஒப்பிட்டு பார்க்கும் போது பல வித்தியாசங்கள் உள்ளன.

நாடாளுமன்றத்தில் கம்பீரமான முறையில் மத்திய வங்கியில் மோசடி நடக்கவில்லை என்றும் ஊடகங்கள் அரசை குழப்புவதாகவும் கூறியதுடன் ஊடகங்களுக்கு அச்சுறுத்தலும் விடுத்தார்.

ஆனால், தற்போது அவரின் கருத்துகளில் பெருமளவில் வித்தியாசங்கள் காணப்படுகின்றன. இதன்ஊடாக இந்த மோசடிகளை மூடி மறைக்கவே பிரதமர் முயற்சித்தார் என்பது தெட்டத் தெளிவாக விளங்குகின்றது.

இந்த நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவியில் இருக்கும் வரைக்கும் மத்திய வங்கி பிணைமுறி விசாரணையில் சுயாதீன தன்மையை எதிர்பார்க்க முடியாது.

ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை பிரகாரம் நீதியான விசாரணையொன்று நடக்கும் என எதிர்பார்த்தால் அது கனவாகவே அமையும்.

மத்திய வங்கி மோசடி விவகாரத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மீதும் ஐக்கிய தேசியக் கட்சியின் மீதும் சுமத்திவிட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தப்பிக்க முயல்கின்றார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் வாக்குகளை சூறையாடும் வகையில் ஆக்ரோஷமான கருத்துகளை ஜனாதிபதி தெரிவித்து வருகின்றார். ஆனால் ஜனாதிபதியும் மத்திய வங்கி மோசடியுடன் நேரடியாக தொடர்புபட்டுள்ளார். ஏனெனில் சிங்கப்பூர் பிரஜை என்று அறிந்தும் அர்ஜுன மகேந் திரனை மத்திய வங்கியின் ஆளுநராக ஜனாதிபதியே நியமித்தார்.

வர்த்தகத்துடன் தொடர்புபட்டவர் என அறிந்து கொண்டும் ரவி கருணாநாயக்கவை நிதி அமைச்சராக நியமித்ததும் அவரேயாகும். மேலும் பிரதமரைக் காப்பாற்றுவதற்கு நாடாளுமன்றத்தை கலைத்தார்.

### ஊடகவியலாளர் மத்தியில் பீரிஸ்

எனவே, இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்துவிட்டு, தற்போது ஒன்றும் தெரியாதமை போன்றும் தன்னுடைய அதிருப்திக்கு அப்பால் சென்றே நிதி அமைச்சர் மற்றும் மத்திய வங்கி ஆளுநர் நியமனங்கள் நடந்தன எனவும் ஜனாதிபதி கூறுகின்றார்.

தற்போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிறந்த நாடகத்தை அரங்கேற்று கின்றார். ஆகவே, இந்த விடயத்தில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று உள்ளது. ரணில் விக்கிரமசிங்கவின் வாக்குகளை பெற்றே மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்தார். ஆகவே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு பயந்தே ஜனாதிபதி செயற்பட்டு வருகின்றார்.

அத்துடன், அர்ஜுன் அலோசியஸுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. எனினும், அது தொடர்பில் ஜனாதிபதி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவ்வாறு எடுத்திருந்தால் சிறந்த முன்னுதாரணமாக அமைந்திருக்கும்.


தற்போது, ஜனாதிபதியின் வாள் எங்கே?. ஜனாதிபதி எடுப்பதாக கூறிய நடவடிக்கை எங்கே? இவையனைத்தும் நாடகமாகும். எனவே, மத்திய வங்கி குற்றவாளிகளை நாம் தப்பிக்க விடமாட்டோம். எனவே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்வை தற்காலிகமாக நீக்க வேண்டும்.

அதேபோன்று, மூன்று வருடங்கள்தான் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்யவில்லை என்றும் இனிமேல் நானே பொருளாதாரத்தை வழிநடத்துவேன் என்றும் கூறியுள்ளார்.

அவ்வாறாயின் இவ்வளவு நிறைவேற்று அதிகாரத்தை வைத்து ஜனாதிபதி என்ன செய்தார். இதுவரை காலம் எந்தவொரு ஜனாதிபதியும் இவ்வாறு கூறியதில்லை. உலக வரலாற்றில் இவ்வாறான ஜனாதிபதி இவர் மாத்திரமே யாவார்.

இவ்வாறான கருத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது அது முற்றிலும் அரசமைப்புக்கும் முரணாகும். நிறைவேற்று அதிகாரத்துக்கும் முரணாகும். இவ்வாறு கூறுவதற்கு ஜனாதிபதிக்கு உரிமை இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அத்தியாவசிய பொருள்களுக்கான வரி அதிகரிப்பு இல்லை என்கிறார் மங்கள



அத்தியாவசியப் பொருள்களுக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுவதில் எந்த உண்மையும் இல்லை என நிதி அமைச்சர் மங்கள அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக நிதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நிதி அமைச்சர் மங்கள சமரவீரவால் கடந்த 18ஆம் திகதி விசேட வர்த்தக பொருள்கள் சட்டத்துக்கு கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் எந்த அத்தியாவசியப் பொருள்களினதும் வரி அதிகரிக்கப்படவில்லை.

மாறாக இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் மாசி, செத்தல் மிளகாய் உட்படப் பலசரக்கு பொருள்கள் பலவற்றுக்கு விதிக்கப்பட்டிருக்கும் விசேட வர்த்தக பொருள்களுக்கான வரியை செயற்படுத்தும் கால எல்லையை மேலும் நீடிப்பதற்கு மாத்திரம் நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் எந்தவித அத்தியாவசியப் பொருள்களுக்கும் வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்படவில்லை.

அத்துடன், எதிர்வரும் 6 மாதங்களுக்கு தற்போது அமுலில் இருக்கும் விலைக்கே குறித்த பொருள்களை நுகர்வோர் பெற்றுக்கொள்ளலாம்.

அதனால், அத்தியாவசிய பொருள்களின் வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் பிரசாரங்களில் எந்த உண்மையும் இல்லை.

மக்கள் பொய் பிரசாரங்களை நம்பி ஏமாறவேண்டாம் என்றும் அவ் அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# உலக சுகாதார தினம் இவ்வாண்டு இலங்கையில்!




கொழும்பு, ஜன. 24

2018 ஆம் ஆண்டுக்கான உலக சுகாதார தினம் இலங்கையில் நடைபெறவுள்ளது.

ஜெனீவாவில் நடைபெற்ற 142 உலக சுகாதார அமைப்பின் நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் இதற்கானத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த வருடத்திற்கான தொனிப்பொருள் உலகளாவிய சுகாதார பாதுகாப்பு (Universal Health Coverage) ஆகும்.

இலங்கை சுதந்திரம் அடைந்து 70 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடுவதையிட்டு உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் Dr. Tedros Adhanom Ghebreyesus வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மக்களுக்கான இலவச சுகாதாரம் தொடர்பில் நீண்டகால வரலாற்றை கொண்டிருப்பதாகத் தெரிவித்த அவர் இதனை நடத்துவதற்கு இலங்கையே பொருத்தமான இடம் என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றிய சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத் துறை அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன -

இந்த நிகழ்வை இலங்கையில் நடத்துவதற்கு இலங்கையை தெரிவு செய்ததற்காக உலக சுகாதார அமைப்பிற்கு நன்றி தெரிவிக்கிறோம் என இதன் போது குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு: பொன்.வேணுகிருஷ்ணா




அசாத் ஆட்சி தூக்கிவீசப்படுவது என்பது, ரஷ்ய கூட்டாட்சியை சீர்குலைப்பதற்கும், இறுதியாக துண்டாடுவதற்கும் நோக்கம் கொண்டு, சிரியாவில் சிஐஏ ஆதரவிலான ஒரு பிரசாரத்தை தொடங்குவதற்கு ரஷ்யாவின் காகசஸ் பிராந்தியத்தில் இருந்து பெறப்பட்ட அல்-கொய்தாவுடன்



இணைந்த இஸ்லாமிய போராளிகளுக்கான ஒரு தளமாக மாறிவரும் விளைவைக் கொடுக்கும் என்று ரஷ்யாவும் நியாயபூர்வமாக அஞ்சியது.

சிரியாவில் மொஸ்கோவின் தலையீட்டிற்கு இந்த மறுக்கமுடியாத தற்காப்பு அம்சம் இருக்கின்ற போதிலும், ரஷ்யாவை இராணுவ ரீதியாக சுற்றி வளைத்து அடிபணியச் செய்ய அமெரிக்கா மற்றும் அதன் நேட்டோ நட்பு நாடுகளின் ஒருங்கிணைந்த பிரசாரத்தின் கீழ் இது தொடங்கப்பட்டது.

இது, சிரியாவைச் சீர்குலைக்கும் நெருக்கடிக்கு எந்தவொரு முற்போக்கான தீர்வையோ அல்லது சிரிய தொழிலாள வர்க்கத்திற்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்கும் எந்தவித முன்னோக்கிச் செல்லும் பாதையையோ வழங்கவில்லை.

இந்த பிராந்தியத்தில் ரஷ்ய தலையீட்டின் குணாம்சம், எகிப்திய சர்வாதிகாரி ஜெனரல் அப்தெல் பத்தா எல்-சிசி உடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு கெய்ரோவில் அவரை



சந்திக்கும் பொருட்டு புட்டின் அடுத்தடுத்து இருமுறை மேற்கொண்ட மத்திய கிழக்கு பயணங்களையும், மேலும் தொடர்ந்து துருக்கியின் எதேச்சதிகார ஜனாதிபதி ரெசெப் டாயிப் எர்டோகன் உடனான ஒரு சந்திப்புக்கு அங்காரவுக்கு பயணம் செய்ததையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. ரஷ்ய போர் விமானங்கள் எகிப்திய தளங்களை பயன்படுத்த அனுமதிக்கும் ஓர் உடன்பாட்டை சிசி ஆட்சியுடன் மொஸ்கோ ஏற்படுத்திக் கொண்டுள்ளதாகக் கூறப்படுவது, வொஷிங்டனை மேலும் விரோதமாக்குகிறது. அப்போது கெய்ரோவில், எகிப்தின் முதல் அணுசக்தி ஆலை ஒன்றை கட்டமைக்க ரஷ்யாவுக்கான ஓர் ஒப்பந்தத்தில் புட்டின் கையெழுத்திட்டார்.



**இதற்கிடையில் துருக்கியில் எர்டோகன், ரஷ்ய S-400 ரக தரையிலிருந்து-விண்ணுக்கு பாயும் ஏவுகணை அமைப்பு ஒன்றை அங்காரா வாங்குவது குறித்து நடத்தப்பட்ட இறுதி பேச்சுவார்த்தைகளை தொடர்ந்தே இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டது என்று அறிவித்தார். நேட்டோ வான்வழி பாதுகாப்பு வலைப்பின்னலில் ஒருங்கிணைக்கப்பட முடியாத இந்த அமைப்பை நிறுவுவதற்கான திட்டம், துருக்கி மற்றும் அதன் முந்தைய மேற்கத்திய நட்பு நாடுகளுக்கு இடையிலான பதற்றங்களை மேலும் அதிகரித்துள்ளது.**




இரண்டு பக்கங்களின் வெளிப்படையான நோக்கமும், ISIS இன் தோல்வி தான் என்பது உணரப்பட்டு வருகின்ற நிலையில், உலகின் இரண்டு முக்கிய அணுவாயுத சக்திகளுக்கு இடையே சிரியாவில் ஒரு நேரடி மோதலை விளைவிக்கும் அச்சுறுத்தல் எப்போதும் மிக தீவிரமாக வளர்ந்து வருகிறது.



சமீபத்திய வாரங்களில், அவர்கள் ஒரு ரஷ்ய ஜெட் விமானத்தை சுட்டு வீழ்த்தக் கூடும் என்று பென்டகன் எச்சரிக்கை விடுப்பதுடன், அமெரிக்க மற்றும் ரஷ்ய இராணுவத்தினர் ஒருவருக்கொருவர், யூப்ரடீஸ் நதிப் பள்ளத்தாக்கின் மீது போர் விமானங்கள் மூலம் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை நிகழ்த்தியுள்ளனர்.

வொஷிங்டன் மற்றும் மொஸ்கோவிற்கு இடையில் அணுவாயுத பதற்றங்கள் பெருகியமுறையில் அபாயக



ரமாக அதிகரித்துவருவதன் பின்னணிக்கு எதிராக இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

வார இறுதியில் அமெரிக்க வெளியுறவுத்துறை, இடைநிலை- தூர அணுவாயுதப் படை உடன்படிக்கை (Intermediate-Range Nuclear Forces-INF Treaty) கையெழுத்தாகி 30 வது வருட நிறைவைப் பற்றிக் குறிப்பிடும் ஓர் அறிக்கையை வெளியிட்டது. இதில், ட்ரம்ப் நிர்வாகம், உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு இணங்குமாறு மொஸ்கோவை தூண்டிவிட நோக்கம் கொண்ட பொருளாதார மற்றும் இராணுவ நடவடிக்கைகளை பின்பற்றி வருவதாக இது தெரிவிக்கிறது.

ஒப்பந்தத்தை முற்றிலும் அகற்றுவதற்கும் மற்றும் அணுசக்தி மோதலுக்கு வழிவகுக்கும் ஒரு பாதையில் இறங்குவதற்குமான ஒரு சாக்குப் போக்காகக் கூறப்படும் ரஷ்ய மீறல்களை செயற்படுத்த வொஷிங்டன் தயாராக உள்ளது என்பதை இந்த அறிக்கை தெளிவுபடுத்த முயன்றது. பென்டகன், நம்மையும் நமது நட்பு நாடுகளையும் பாதுகாக்க அமெரிக்காவிற்கு உதவக்கூடிய வழமையான, தரையில்-தொடங்கப்பட்ட, இடைநிலை-தொலைதூர ஏவுகணை அமைப்புகள் உள்ளிட்ட, இராணுவ கருத்துக்கள் மற்றும் தேர்வுகளைப் பற்றி ஒரு மதிப்பாய்வை நடத்திக் கொண்டிருக்கிறது என்று வெளியுறவுத்துறை எச்சரித்தது.

(கேள்வி தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. ‘உன்னைச் சரணடைந்தேன்’ என்ற அவரது தொகுப்பில் ‘யாழில் கம்பன்’ பற்றிய தொடர் பதிவு இது.



## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 76

# உன்னைச் சரணடைந்தேன்



### ஐந்தாவது காரைநகர் கம்பன் விழா 21.01.1994

**கஜரூபன்:**

இவன் 1993 ஆம் ஆண்டு கழகத்தில் இணைந்தான். இவனது சொந்த ஊர் சரவணை. என்மேல் உண்மையானஅன்புகொண்டவன். எம்மோடு தொடர்பு கொண்ட நாட்தொட்டு இன்றுவரை, அன்பு குன்றாது வாழ்பவன். இவனுக்கு கழகத்தை விட என்மேல் பற்று அதிகம். உண்மை அன்பு இவனது பலம். ஓடும் சிந்தை இவனது பலவீனம். உறவு வரிசையில் எங்களையே முதலிடத்தில் வைத்திருந் தான். ஒரு தாய் போல் என்னைப் போற்றுவான். நாம் கொழும்பு வந்த பிறகு, ஒரு முறை வவுனியாவில் இவன் மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் அகப்பட்டு, பெரியளவில் பாதிப்புற்றான். அப்போது, ‘‘நான் ஜெயா அண்ணையுடன் போயிருந்து, வருத்தத்தை மாற்றிக் கொண்டு வரப்போகிறேன்’’ என்று வீட்டில் சொல்லிவிட்டு, கடுங்காயத்துடன்என்னைத் தேடிக் கொழும்பு வந்துவிட்டான். அவனை வைத்துப் பராமரிக்கும் சூழல் அப்போது எனக்கு இல்லாதிருந்தபடியால், அவனைத் திருப்பி வவுனியாவிற்கே அனுப்பி வைத்தேன். அச்செயல் இன்றும் அவன் மனதில் வடுவாகப் பதிந்திருக்கிறது. என் மனதிலும் தான். ‘‘நம்பி வந்த என்னைக் கைவிட்டனீங்கள் தானே!’’ என, இப்போதும் என்னைக் குறை சொல்வான். பெற்ற பிள்ளை போல, எவ்வித தன்மானமும் பார்க்காமல் எனக்கான வேலைகள் அனைத்தையும் விருப்போடு செய்வான். நான் களைத்துப் படுத்திருந்தால், என் கால்களைப் பிடித்து விடுவான். 1995 இல் நாம் இடம் பெயர்ந்த போது எம்மோடு இருந்த சில இளைஞர்கள், நாம் அவர்களை விட்டுக் கொழும்பு வந்து விட்டோம். எனும் அன்புக் கோபத்தில் யாழில், எம்மைத் தூற்றித் திரிந்தனர். இவன் ஒருவனே அக்குழுவிற் சேராது தனித்திருந்தான்.இவனோடு கழகத்தில் சேர்ந்த பலரும் உலகியலாய் முன்னேற, தான் மட் டும் முன்னேறவில்லை எனும் தாழ்வு மனப்பான்மை இவனுக்குண்டு. ஆனால், அறம் வழுவாத, அன்பு குன்றாத, அனைவரையும் அணைத்து நடக்கும், இவனது மன உயர்வைப் பார்த்து, மற்றவர்கள் தான் தாழ்வு மனப்பான்மை அடைய வேண்டும் என்பது எனது கருத்து. வாழ்வின் எந்த விடயமானாலும், என்னோடு அதுபற்றி மணிக்கணக்கில் ஆலோசிப்பான். பிறகு தான் நினைத்ததையே செய்வான். மற்றவர்களோடு அதிகம் பழகாத, எங்கள் ரத்தினகுமாருக்கும் இவன் செல்லப்பிள்ளை. இவன் குடும்பத்தார் இவனோடு தனிப்பட்ட ரீதியில் கழகத்தை வெறுத்துப் பேசினாலும், எம்மோடு அன்பு பாராட்டவே செய்தனர். கழகம் இவனுக்கு எந்தப் பயனையும் செய்யவில்லை என்பது இவனது குடும்பத்தாரது குற்றச்சாட்டு. ஆனாலும், இவன் அதைப்பொருட்படுத்துவதில்லை. அவ்வப்போது அவர்கள் குற்றச்சாட்டை, தனது குற்றச்சாட்டாய் எமக்குரைப்பான். அத்தோடு அதை விட்டுவிட்டு அன்பு செய்வான். இன்று திருமணமாகி குழந்தைகளோடு வவுனியாவில் வாழ்கிறான். எங்கள் மேல் அன்பு செய்வதிலும் எங்களை உபசரிப்பதிலும், இவன் மனைவி இவனோடு போட்டி போடுவாள். இவனைப் போலவே இவன் மனைவியும், எம்மை உறவாய் நினைத்துப் போற்றுகிறாள். முத்து முத்தான மூன்று பெண் குழந்தைகளுடன், அன்பைப் பெருக்கி அறத்தை வளர்த்து, இனிய இல்லறம் நடத்துகிறான். இன்றும் வீடாய்க் கழகத்தையும் தாயாய் என்னையும் நினைந்து போற்றி வரும் அன்பன். ‘‘இங்கிவனை நான் பெறவே என்ன தவம் செய்து விட்டேன்’’

**மார்க்கண்டு**

கல்வயல் குமாரசாமியால் எமக்கு அறிமுகமானவர் இவர். எனது வயதொத்தவர். கொள்கையாளர். நூறு வீத உண்மையாய் நடக்க விரும்புபவர். இவரது உண்மைத் தன்மையின் உறுதியே இவரது நிறையும் குறையுமாம். யதார்த்தம் உணர்ந்து நடக்கத் தெரியாத பிறவி, தர்மவான்களை வெளிப்பட விரும்பினாலும், அதர்மவான்களையும் உள்ளூர நேசிக்கும் ஒரு விசித்திரப் பிறவி. உயர்ந்த கொள்கைகளை நேசித்தாலும் உலகியல் சமரசத்திற்காய் அக்கொள்கைகளை, ஆங்காங்கே கைவிட்டு விடுபவர். தன்னையும் மற்றவர்களையும் அளக்கும், சரியான மனத்தராசு இல்லாதது இவரது குறை. ஆரம்பத்தில் இவர் என்மேல் கொண்டிருந்த அன்பை நான் தெரிந்துகொள்ளவில்லை. என்னுடன் சேர்ந்து வாழ்ந்த பலர், சோதனை வந்த காலத்தில் ஒதுங்கிக்கொள்ள, நான் அவமதிக்கப்பட்டேன் என்பதற்காக, தான் ஆதரித்து வந்த புலிகளோடு முரண்பட்டு, தன் மேடைப் பேச்சுக்களை நிறுத்திய பிடிவாதக்காரர். அவரது அச்செயலின் பின் தான் அவரது உண்மைத் தன்மையைத் தெரிந்துகொண்டேன். எனது செயல்களைக் கடுமையாய் விமர்சிப்பார். ஆனாலும், என் முடிவுகளோடு மறுப்பின்றி ஒத்துப் போவார். எங்கள் மேலான இவர் அன்பு நாளாந்தம் வளர்ந்தது. நாம் 1995 இல் இடம் பெயர்ந்து சாவகச்சேரி வந்தபோது, எங்களை அன்பாய் ஆதரித்தார். தென்மராட்சியில் இவரைச் சுற்றி ஓர் இலக்கியக் குழாம் இயங்குகின்றது. உண்மை மாறாத கிராமிய இளைஞர்களான அவர்களும், இவரைப் போன்றே வெள்ளை உள்ளத்தினர். இடப்பெயர்வின் பின் சில காலம் இந்தியாவில் வாழ்ந்தார். அப்போது பேரறிஞர் அ.ச. ஞானசம்பந்தனின் முழு அன்பையும் பெற்றார். அ.ச.ஞா. அவர்களோடு இவரை இணைத்து வைக்கும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. அப்பேரறிஞர் இவரைத் தன் உயிர் மாணவனாய் நேசித்தார். நெகிழ்வில்லாத பிடிவாதமும், எல்லோரையும் சமாளிக்க நினைக்கும் பல வீனமும், கோபம் வந்துவிட்டால் முகம் முறித்துப் பேசும் இயல்பும், இவரது குறைபாடுகள். பொய்யில்லா உள்ளம் இவரது மிகப் பெரிய நிறை. கழகத்தின் மேல் நூற்றுக்கு நூற்றியொரு வீதம் விசுவாசம் கொண்ட நண்பர். என்னை முழுமையாய் ஜீரணிக்க முடியாவிட்டாலும் என் ஆளுமையை ரசித்து மதித்து அன்பு செய்பவர். என்னுடைய வயதொத்தவரானாலும் என்னை ஒரு குருபோல் போற்றுவார். இவருக்கு வாய்த்த வாழ்க்கைத் துணை இவரது பெரும் பலங்களில் ஒன்று. இவர் குடும்பம் முழுவதும் இவர்க்கு நிகராக என்மேல் அன்பைப் பொழியும். கழகத்தைக் குடும்பமாய் நேசிப்போரில் இன்று முன் நிற்பவர் இவர்.

**கிருபானந்தா**

நயினாதீவைச் சேர்ந்த இவன் மென்மையானவன். எங்கள் கழகப் பணிகளில் முழுமனதாக ஈடுபட்டவன். என்மேல் நிறைய அன்பும் மதிப்பும் கொண்டவன். ஆசிரியனாய்த் தொழில் புரிந்தான். அத்தொழிலில் அக்கறை இல்லாததால், அடிக்கடி என்னிடம் திட்டு வாங்குவான். பெரிய பக்திமான். கழகத்தாரின் விருந்தோம்பல் செய்தலில் இவனுக்கே முதலிடம். வீட்டில் செய்யும் நல்ல உணவுகளை எங்களை விட்டு ஒருக்காலும் உண்ண மாட்டான். எங்களைக் குறை சொல்பவர்களோடு மோதுவான். இடப்பெயர்வின் பின் கழக முயற்சிகள் குன்றிப்போனதால், பின்பு யாழ்ப்பாணத்தில் சில இலக்கிய அமைப்புக்களில் இணைந்து, செயற்பட்டு வருகிறான். பெண்மையும், மென்மையும் இவனது நிறைகள். வாழ்க்கைத் துணை இவனுக்கும் ஒரு வரம். போர் முடிந்த பின்பு யாழில் தொடங்கியிருக்கும் கம்பன் பணி முயற்சிகளில் இன்றும் முன்னின்று உழைத்து வருகிறான். கொள்கையில்லாத புகழ் நோக்கிய சமுதாய முயற்சியும் பழைமை வாதங்களும், பயனில் சொல் பாராட்டுதலும் இவனது குறைகள். சமுதாயத்திற்கு ஏதேனும் செய்ய வேண்டும் எனும் விருப்பும், முடிவில்லா விருந்தோம்பலும் இவனது நிறைகள். எங்கிருந்தாலும் கழகத்தை தாய் வீடாய்க் கருதுபவன்.

**ஜெயநிதி**

பிரசாந்தன், மணிமாறன் ஆகியோரோடு வந்து, கழகத்தில் இணைந்தவன் இவன். நல்ல பேச்சாளன். ஆரம்பத்தில் கழகத்தோடு நெருங்கியிருந்தான். எம்மோடு பல நிகழ்ச்சிகளில் கலந்து பேசினான். எமது பட்டிமண்டபங்களில் அப்போது, இம் மூவருமே இளைய கதாநாயகர்கள். சுயவாழ்வு பற்றி அதிக அக்கறை கொண்டவன். வெற்றி நோக்கிய விருப்பில் கொள்கைகளைக் கரைய விடுவான். ஆனாலும், கழகப் பிள்ளையாய் நெருங்கியிருந்தான். இடப்பெயர்வின் பின் பல்கலைக் கழகம் சென்று, அங்கு கழக முத்திரை தன்னைப் பாதிக்குமோ என நினைந்து எம்மைவிட்டுச் சற்று விலகிப் போனான். ஆனாலும், இன்றும் எம்மேல் அன்போடிருக்கிறான். இப்பொழுது அவன் வாழ்க்கை அமெரிக்காவில்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கை புறக்கணிக்கும் அரசின் சதிக்கு இந்தியா துணைபோவது பெரும் வேதனை!

## அமைச்சர் அனந்தி குமுறல்



யாழ்ப்பாணம், ஜன. 24

வடக்கு மாகாண சபையின் நிர்வாக எல்லைக்குள்ளாக நடைபெறும் பொது நிகழ்வுகள், அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பவற்றில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாணசபையை முற்றிலுமாக புறக்கணித்து, அதுகுறித்தான முன்னெடுப்புகளை தன்னிச்சையாக மேற்கொண்டு வரும் மத்திய அரசின் சதிக்கு இந்திய அரசும் துணைபோவது வேதனையளிக்கிறது என வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் அமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 26, 27 மற்றும் 28 ஆகிய திகதிகளில் நடைபெற ஏற்பாடாகியுள்ள 9 ஆவது சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நிகழ்வும் வடக்கு மாகாண சபையை முற்றிலுமாக புறக்கணித்து நடத்தப்படவிருக்கின்றது.

இந்த நிகழ்விற்கான முன்னேற்பாடுகள் ஏறக்குறைய நிறைவடையும் இத்தருணம் வரை வட மாகாண சபையின் வர்த்தகமும் வாணிபமும் அமைச்சராக இருக்கும் எனக்கு எதுவித அறிவிப்போ, அழைப்போகிடைக்கவில்லை.

மக்களால் ஜனநாய முறையில் தேர்வு செய்யப்பட்ட மாகாண சபை நிர்வாகத்தை வேண்டுமென்றே புறக்கணித்து மத்திய அரசின் நிர்வாக கட்டமைப்புகளினூடாக வடக்கில் பொது நிகழ்வுகளையும் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதானது இலங்கை அரசின் திட்டமிட்ட சதியாகும். இதற்கு இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் துணை போவது வேதனையளிக்கின்றது.

வடக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அழுத்தங்களை பிரயோகித்த இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் அதற்கான அதிகாரங்களை வழங்கும் விடயத்தில் மௌனமாக இருப்பதானது இவ்வாறு வடமாகாணசபையை திட்டமிட்டு புறக்கணித்து முன்னெடுப்புகளை மேற்கொள்வதற்கான உந்துதலை இலங்கை அரசுக்கு கொடுத்துள்ளது.

இந்த விடயத்தில் இந்தியாவும் மௌனமாக இருந்து வருவது தமிழர்களாகிய எமக்கு பெரும் ஏமாற்றத்தையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

முன்னைய இந்திய இலங்கை அரச தலைவர்களால் ஏற்படுத்தப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் ஏற்று அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

இந்தியாவின் சிறந்த நட்பு நாடாக இலங்கையை சீராட்டி பாராட்டி வந்த நிலையிலும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு வேட்டுவைக்கும் வகையில் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தனித்தனி நிர்வாக அலகுகளாக பிரிக்கப்பட்டன.

தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசின் இந்த நடவடிக்கையினை கண்டிக்கவோ, தடுத்து நிறுத்தவோ அப்போதைய இந்திய அரசோ தொடர்ந்து வந்த அரசுகளோ ஆக்கபூர்வமான முயற்சிகளை எடுத்திருக்கவில்லை என்பது பெரும் குறடியாகவே இன்று வரை நீடித்து வருகின்றது.

தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டத்தை மக்களின் ஆதரவுடன் விடுதலைப்புலிகள் முன்னெடுத்து வந்த போது, மக்களிடம் இருந்து புலிகளை அந்நியப்படுத்தி பலவீனப்படுத்துவதற்கு மேற்கொண்ட சதித்திட்டத்தின் நீட்சியாகவே தற்போதைய மாகாணசபையை புறக்கணிக்கும் அரசின் செயற்பாடுகளும் அமைந்துள்ளன.

மக்களால் ஜனநாயக வழியில் தெரிவுசெய்யப்பட்ட வட மாகாண சபையின் நிர்வாக எல்லைக்குள்ளாக நடைபெறும் முன்னெடுப்புகளில் வட மாகாண சபையை புறந்தள்ளும் இலங்கை அரசின் இச்சதியில் இந்திய அரசும் மௌனமாக பங்கேற்பதானது, அதிகாரப் பரவலாக்கத்தை மேற்கொண்டு தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்று வலியுறுத்தி வருதன் மீதான ஐயப்பாட்டை தமிழர்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச வர்த்தகக் கண்காட்சிக்கு இந்திய அரசின் ஒத்துழைப்பும் ஆதரவும் மேலோங்கியிருக்கும் நிலையில், இந்த நிகழ்விற்கு வடக்கு மாகாண சபை முதலமைச்சர் மற்றும் துறைசார் அமைச்சர்கள் உள்ளிட்டவர்களின் பங்கேற்புடன் நடாத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்திக் கூறக்கூடிய இடத்தில் இருந்தும் அதனை செய்யாதமை உண்மையில் எமது மக்களுக்குப் பெரும் வேதனையையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது என அமைச்சர் அனந்தி சசிதரன் அவர்கள் மேலும் தெரித்தார்.

## சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட ரூ.3 கோடி பெறுமதியான பொருள்கள் அழிப்பு!




சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 31 மில்லியன் பெறுமதியான ஒரு தொகை பொருள்கள் இலங்கை சுங்கப் பகுதியால் அழிக்கப்பட்டுள்ளன.

அறிவுசார்ந்த சொத்துக்களின் பாதுகாப்புக்கு அமைவாக 2017 ஆம் ஆண்டு சுங்கப் பகுதியினரால் கைப்பற்றப்பட்ட பொருள்களே ஒறுகொடவத்த ஆர்.சி.டி. கொள்கலன் களஞ்சியசாலையில் சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சாள்ஸ் முன்னிலையில் நேற்றுமுன்தினம் அழிக்கப்பட்டவையாகும்.

பெருந்தொகையான பாடசாலை உபகரணங்கள், பொம்மைகள் கையடக்கத் தொலைபேசி பாகங்கள் உள்ளிட்டவையே இவ்வாறு அழிக்கப்பட்டன.

பெரும்பாலான இந்த பொருள்கள் பிரபல வர்த்தக சின்னங்களின் பெயர் அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்டவை ஆகும்.

## அனைவரையும் வியக்க வைத்த இப்படியும் ஒரு திருமணம் நிகழ்வு!



கொழும்பு, ஜன. 24

இலங்கையில் பலரும் வியக்கும் வகையில் திருமண நிகழ்வு ஒன்று நடைபெற்றுள்ளது.

லசித மற்றும் திலினி முனசிங்க தம்பதிகளுக்கு நடந்த திருமணம் அனைவரும் பேசும் அளவுக்கு பிரபல்யம் அடைந்துள்ளது.

திருமணத்திற்கு வருகை தந்த அனைவருக்கும் மணமகன் மற்றும் மணமகளால் பரிசு ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிசுப் பொதியில், சீத்தா மரக்கன்று ஒன்றை தம்பதியினர் வழங்கியுள்ளனர்.

சீத்தா மரக்கன்றை கட்டாயமாக நடுகை செய்யுமாறு தம்பதியினர் அன்பாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டின் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கில் இளம் தம்பதியினர் முன்னெடுத்த நடவடிக்கை குறித்துப் பலரும் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

# இலங்கைக்கான புதிய தூதுவர்கள் ஐவர் நியமனம்



கொழும்பு, ஜன. 24

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இலங்கைக்கான தூதுவர்கள் ஐவர் ஜனாதிபதியிடம் தமது நியமனக் கடிதங்களை சமர்ப்பித்தனர்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இலங்கைக்கான தூதுவர்கள் ஐவர் நேற்று முற்பகல் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடம் தமது நியமனக் கடிதங்களை சமர்ப்பித்தனர்.

சூடான், வியட்நாம், மியன்மார், கொரியா மற்றும் சீன நாட்டின் தூதுவர்களே இவ்வாறு புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன, ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50. தேசிய இலச்சினையில் பூ இதழ்களால் சூழப்பட்டு கையில் வாளுடன் நிற்கும் சிங்கம் குறிப்பது
   1) சௌபாக்கியம்
   2) தன்னிறைவு
   3) நாட்டையும் கட்டுப்பாடான நாட்டு மக்களையும்
   4) நிலைத்திருத்தல்

51. மிகவும் பாதுகாப்பான செயற்பாடாகக் கருதக்கூடியது
   1) கூரிய ஆயுதத்தை கையில் கொண்டு ஓடுதல்
   2) இடி மின்னல் வேளையில் வீட்டில் கட்டிலில் இருத்தல்
   3) வாகன நெரிசல் உள்ளபோது பாதையைக் குறுக்காகக் கடத்தல்
   4) நடந்து செல்லும்போது பாதையின் இடது புறத்தைப் பயன்படுத்தல்

52. "புதுமனைத்தம்பதியினருக்கு கையில் நீர் வார்த்தல்" சொற்றொடு வந்த இனத்தவரின் பழக்கவழக்கங்கள் எவர்?
   1) தமிழர் 2) சிங்களவர் 3) முஸ்லிம்கள் 4) பறங்கியர்

53. பிராணிகள் தாக்கத்திலிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்காகப் பயன்படுத்தும் அமைப்பு
   1) நீர்ச்சில்லு 2) நீர்த்தாரை 3) நீர்ப்பிசாசு 4) நீர்வடிகட்டி

54. நமது நாட்டிற்குரிய தாவர வகையினுள் அடங்கும் தொகுதி
   1) சண்டலை, தொரணை, நாவல், கீண்டுக்கொடி
   2) வெசாக் ஒக்கிட்டு, பெரும்பிரம்பு, தென்னை, நிலவேம்பு
   3) நிலவேம்பு, கஸ்தூரி மஞ்சள், குங்கிலியமரம், எண்ணை
   4) வெசாக் ஒக்கிட்டு, தொரணை, தென்னை, பனை


55. பயிர்செய்வதற்கு பொருத்தமான வித்துக்களின் இயல்பு அல்லாதது
   1) நன்கு முதிர்ச்சியடைந்திருத்தல் 2) பூச்சிகள் அரிக்காதிருத்தல்
   3) உரிய நிறம் செறிந்து வைரமாயிருத்தல் 4) வித்துக்கள் சுருங்கி இருத்தல்

56. "புறப்படுவோமே மச்சான் புறப்படுவோமே" என்ற பாடல் எவ்வகையைச் சேர்ந்தது?
   1) அரிவு வெட்டுப் பாடல் 2) தும்மிப்பாடல்
   3) கப்பலோட்டும் பாடல் 4) மீனவர் பாடல்

57. இலங்கைக்கு ஆங்கிலேயர் வந்த ஆண்டு
   1) கி.பி. 1505 2) கி.பி. 1658 3) கி.பி 1796 4) கி.பி 1948

58. இலங்கைத் திருநாடு உலகுக்கு அளித்த தத்துவஞானி எனப் போற்றப்படுபவர்
   1) கலாநிதி ரீ.பீ.ஜாயா 2) சேர் டீ.பி.ஜயதிலக்க
   3) கொங்காலே கொடபண்டா 4) கலாநிதி ஆனந்தகுமாரசுவாமி

59. அசுத்த நீரைப் பருகுவதால் ஏற்படும் நோய்
   1) அம்மை 2) தொழுநோய் 3) மஞ்சள் காமாலை 4) நீரிழிவு

60. 

பிள்ளைகள் விளையாடும் விளையாட்டைச் சொற்றொடர் குறிப்பிடுவது
   1) நண்பனைப் பிடிப்போம்
   2) தூரத்திற் செல்வோம்
   3) கடையை நிரப்புவோம்
   4) தேன்வதை எடுப்போம்








வினாத்தாள் 7 பகுதி- II இன் தொடர்ச்சி...

தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடையை எழுதுக.

17. 1) கிலோகிராம் கிராமில் தரப்பட்ட அளவினைக் கிராமில் தருக.
   4kg 50g = ................ g
   2) மில்லிலீற்றரில் தரப்பட்ட அளவினை லீற்றர் மில்லிலீற்றரில் தருக.
   1075l = .......... l ........ ml

18. அருகில் தரப்பட்டுள்ள உருவின் சுற்றளவைக் காண்க.




..............................


19. 

இக்கடிகாரம் பிற்பகல் நேரத்தைக் காட்டுகின்றது.
இக்கடிகாரம் காட்டும் நேரத்திற்கு 3 மணித்தியாலம் 45 நிமிடங்களுக்குப் பின்னர் வரும் நேரம் யாது?
   i) நேரம் யாது? ................................
   ii) இந்நேரத்தை நியமநேரத்தில் எழுதுக. ................................

20. 824 எள்ளுருண்டைகள் உள்ளன. இவை ஒரு பையில் 8 வீதம் இருக்குமாறு சிறிய பைகளில் அடைக்கப்பட்ட சிறிய பைகள் எத்தனை? ................................


21. கிருஷ்ணனின் வயது 32 வருடங்கள் ஆகும். குமார் கிருஷ்ணனிலும் 5 வருடங்கள் மூத்தவன் ஆவான். நிசாரின் வயது கிருஷ்ணனின் வயதின் $\frac{3}{4}$ ஆகும் எனின், மூவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை எத்தனை வருடங்கள் ஆகும்? ................................


22. மகிழுந்து ஒன்று மணிக்கு 60 கிலோமீற்றர் என்னும் வீதத்தில் பயணிக்கிறது. அது 225 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள நகர் ஒன்றை சென்றடைவதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும்? ................................

23. 


   1) உருவில் நிழற்றிய பகுதியை ஒரு பின்னமாக எழுதுக. ......................
   2) நிழற்றாத பகுதியை ஒரு தசம எண்ணாக எழுதுக. ......................
(4 புள்ளிகள்)

24. கீழுள்ள திண்மங்களின் உச்சிகள், ஓரங்களின் எண்ணிக்கைகளை எழுதுக.

1) 
உச்சிகள் ................
ஓரங்கள் ................

2) 
உச்சிகள் ................
ஓரங்கள் ................

25. சதுரவடிவ வயல் ஒன்றின் சுற்றளவு 36m 20cm ஆகும். வயலின் ஒரு பக்கத்தின் நீளத்தை சென்றி மீற்றரில் தருக.
.................... சென்றிமீற்றர்

26. 


   i) இவ்வுருவின் உள்ளே காணப்படும் செங்கோணங்கள் எத்தனை? ..............................
   ii) இவ்வுருவின் சமச்சீர் கோட்டினை வரைந்து காட்டுக.

27. ஒரு பிள்ளைக்கு 4 அப்பியாசக் கொப்பி வீதம் 105 பிள்ளைகளிற்கு வழங்குவதற்கு 380 அப்பியாசக் கொப்பிகள் இருந்தன. இன்னும் எத்தனை தேவை? ................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. உருவில் $\frac{2}{3}$ ஐ நிறந்திட்டுக.



29. விலைப்பட்டியலை அவதானித்து வினாக்களிற்கு விடை தருக.

| பொருள் | அளவு | விலை |
|---|---|---|
| கதைப்புத்தகம் | 1 | 90.00 |
| பென்சில் பெட்டி | 1 | 120.00 |
| கலர் சோக்பெட்டி | 1 | 180.00 |
| வெளிக்கள கோப்பி | 1 | 165.00 |




வெளிக்கள கோப்பி இரண்டும், கலர்சோக் பெட்டி ஒன்றும், கதைப்புத்தகம் இரண்டும் வாங்கிய குமரன் கடைக்காரரிடம் 500 ரூபாய் தாள் 2 கொடுத்தான். அவனுக்குக் கிடைத்த மீதிப்பணம் யாது?

..........................................

30. விலைப்பட்டியலிலுள்ள எல்லாப் பொருட்களிலும் ஒன்று வீதம் வாங்கத் தேவையான மொத்தப் பணம் எவ்வளவு? ..........................................

**31 - 60 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கீறிடுக.**

31. இலங்கைக்கே உரித்தான ஒரு உயிரி
1) கொம்பு ஓணான் 2) மரநாய் 3) மரத்தேரை 4) நாரைப் புழுணி


32. காற்று வீசும் திசையை அறிய உதவும் உபகரணத்தைக் காட்டும் உரு
1)  2)  3)  4) 

33. சித்திரைப் புதுவருடத்தில் மருத்துநீர் வைத்து நீராடும் சம்பிரதாயத்தைக் கொண்டவர்கள்
1) சிங்களவர்கள் 2) தமிழர்கள் 3) முஸ்லீம்கள் 4) பறங்கியர்கள்

34. இரவில் பூக்கும் பூக்களைக் கொண்ட தொகுதி
1) அலரி, அந்திமந்தாரை 2) பவளமல்லிகை, தாமரை
3) கடுபுல், பவளமல்லிகை 4) ரோஜா, செவ்வரத்தை


35. மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள மாவட்டம் அல்லாதது
1) கண்டி 2) நுவரெலியா 3) கேகாலை 4) மாத்தளை

**பின்வரும் அமைப்பை அவதானித்து 36ம், 37ம் வினாக்களிற்கு விடை தருக.**



36. வண்ணத்துப்பூச்சி அந்தரத்தில் நின்று அசைவதற்குக் காந்தத்தின் எவ்வியல்பு காரணமாகும்?
1) கடத்துதல் 2) கவருதல்
3) தள்ளுதல் 4) விலக்குதல்

37. நூலில் கட்டப்பட்ட வண்ணத்துப்பூச்சி அந்தரத்தில் நிற்கும் போது நூலை வெட்டினால் வண்ணத்துப் பூச்சிக்கு யாது நிகழும்?
1) கீழே விழும் 2) காந்தத்துடன் ஒட்டிக்கொள்ளும்
3) எதுவும் நடைபெறாது 4) தூரத்தே வீசப்படும்

38. 

காட்டப்பட்ட உடுக்கோலம்
1) தேள்
2) வேட்டைக்காரன்
3) சிறுகரடி
4) கலப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





39. நீருள்ள கண்ணாடிக் குவளை ஒன்றினுள் பனிக்கட்டிகள் சில இடப்பட்டன. சிறிது நேரத்தின் பின் குறித்துக்கொள்ளப்பட்ட அவதானங்களில் பிழையானது எது?
1) பனிக்கட்டிகள் நீரினுள் அமிழ்தல்
2) பனிக்கட்டிகள் நீரினுள் மிதத்தல்
3) கண்ணாடிக் குவளையின் வெளிப்புறத்தில் நீர்த்துளிகள் படிதல்
4) பனிக்கட்டி உருகுதல்

40. இலங்கையின் தேசிய கீதத்தை தமிழில் மொழிபெயர்த்தவர்
1) விபுலாநந்த அடிகள் 2) ஆனந்த சமரக்கோன்
3) மு.நல்லதம்பி 4) ஆனந்த ராஜகருணா

41. இலங்கையின் புகையிரதப் பாதைகள் இணையும் சந்தியில் அமைந்துள்ள புகையிரத நிலையங்களில் ஒன்று
1) கண்டி 2) பொல்கஹவெல 3) மாஹோ 4) குருணாகல

42. மண்ணரிப்பினால் ஏற்படத்தக்க விளைவு அல்லாதது
1) பயிர்கள் சேதமடைதல் 2) மண்வளம் அதிகரித்தல்
3) நிலம் பயன்படுத்தல் சிரமமாதல் 4) ஆறுகளின் அடியில் மணல் நிரம்புதல்

43. பயிர் செய்யப்படும் பகுதி ஒன்றை அமைப்பதற்கான நிலத்தில் காணப்பட வேண்டிய பண்பு அல்லாதது
1) நன்றாக சூரியஒளி படக்கூடியதாக இருத்தல்
2) உக்கிய தாவர விலங்குப் பகுதிகள் கலந்திருத்தல்
3) நன்றாக நீர் தேங்கி நிற்கக்கூடியதாக இருத்தல்
4) மணலும் களியும் சம அளவில் காணப்படல்

44. குடுவையில் இருந்த தேயிலைச் சிறிதளவைக் கண்ணாடிக் குவளையில் உள்ள குளிர் நீர் மீது இடும் போது அவதானிக்க முடிவது
1) நீர் இளங்கபில நிறமாக மாறும்
2) நீர் கரும் மஞ்சள் நிறமாக மாறும்
3) நீர் மேற்பரப்பில் கருங்கபிலக் கோடு நீரினுள் பரவும்
4) நீரில் இளம் மஞ்சள் நிறம் மாத்திரம் தோன்றும்

45. பலாக்காயில் அதிகம் அடங்கியுள்ள போசணை
1) புரதம் 2) விற்றமின் 3) காபோவைதரேற்று 4) கனியுப்பு

46. அலுமினியப் பாத்திரத்தில் வைத்துப் பேணத்தக்க உணவு
1) மீன் 2) இறைச்சி 3) வெண்ணெய் 4) ஊறுகாய்

47. வடமேல் மாகாணத்திற்குரிய ஒரு நகரம்
1) நீர்கொழும்பு 2) புத்தளம் 3) மன்னார் 4) இரத்தினபுரி

48. பின்வரும் எப்பிராணிகளின் வடிவம் காரணமாக சூழல் அழகு பெறும்?
1) வண்ணத்துப்பூச்சிகள் 2) நுளம்புகள்
3) சிலந்திகள் 4) நத்தைகள்

49. கத்தரி, வெண்டி, தக்காளி போன்ற பயிர்களுக்கு அதிகம் சேதத்தை ஏற்படுத்துவது
1) தும்பி 2) வெட்டுக்கிளி 3) மீலிமூட்டைப்பூச்சி 4) தண்டுகோதி

# ஜெருசலேம் நகரில் அடுத்த ஆண்டுக்குள் புதிய தூதரகம்

டெல் அவிவ்,ஜன.24

இஸ்ரேல் நாட்டின் டெல் அவிவ் நகரில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அடுத்த ஆண்டுக்குள் ஜெருசலேம் நகரில் இயங்கத் தொடங்கும் என அமெரிக்கத் துணை அதிபர் மைக் பென்ஸ் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.


அமெரிக்கா உறுதி

இஸ்ரேல் தலைநகரமாக ஜெருசலேம் நகரை அறிவித்த முடிவை ட்ரம்ப் திரும்பப்பெற வேண்டும் என ஐ.நா. பாதுகாப்பு சபையில் கடந்த மாதம் எகிப்து நாட்டின் சார்பில் தாக்கல் செய்த ஒருபக்கம் கொண்ட தீர்மானத்தை தனது வீட்டோ அதிகாரத்தால் அமெரிக்கா தோற்கடித்தது.

இந்த நிலையில், இஸ்ரேல் நாட்டில் சுற்றுப்பயணம் செய்துவரும் அமெரிக்கத் துணை அதிபர் மைக் பென்ஸ் தற்போது டெல் அவிவ் நகரில் இயங்கி வரும் அமெரிக்கத் தூதரகம் அடுத்த ஆண்டு இறுதிக்குள் கிழக்கு ஜெருசலேம் நகரில் இயங்கத் தொடங்கும் என உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

ஜெருசலேம்தான் இஸ்ரேல் நாட்டின் தலைநகரம் என்பதால் டெல் அவிவ் நகரில் இயங்கிவரும் அமெரிக்க தூதரகத்தை ஜெருசலேம் நகருக்கு மாற்றுவதற்கான ஆயத்தப் பணிகளில் ஈடுபடுமாறு அமெரிக்க வெளியுறவுத்துறைக்கு அதிபர் டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ஆட்சியை நீடித்தால் சுட்டுக் கொல்லுங்கள்

## பிலிப்பைன்ஸ் அதிபர் உருக்கம்

மணிலா,ஜன.24

அரசமைப்புச் சட்டத்தை மீறிச் சர்வாதிகாரியாக நான் முயற்சித்தால் இராணுவம் மற்றும் பொலிஸார் என்னைச் சுட்டுக் கொல்லலாம் என பிலிப்பைன்ஸ் அதிபர் ரோட்ரிகோ டுட்டர்டே தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் போதைப்பொருள் கடத்தலை ஒழிக்க அதிபர் ரோட்ரிகோ டுட்டர்டே அதிரடி நடவடிக்கை எடுத்து வருகிறார். போதைப் பொருள் கடத்தல்காரர்களைக் கண்டதும் சுட்டுக் கொல்லுமாறு அவர் உத்தரவிட்டுள்ளார்.

இதுதவிர, ஆட்சி மற்றும் நிர்வாகரீதியாக பல்வேறு சீர்திருத்தங்களையும் அவர் மேற்கொண்டு வருகிறார். நாட்டின் பன்முகத்தன்மையை மாற்றி ஒருமுகப்படுத்தப்பட்ட மத்திய ஆட்சிக்கு அதிக அதிகாரம் அளிப்பதன்மூலம் அனைத்து மாகாணங்களிலும் சமச்சீரான ஆட்சி முறையை அறிமுகப் படுத்தவும் ரோட்ரிகோ டுட்டர்டே முயன்று வருகிறார்.



அவரது இந்த நடவடிக்கை நாட்டின் ஜனநாயகத்துக்கு ஆபத்தாக அமையும் என்று எதிர்க் கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. நாட்டின் சர்வா திகாரியாக முன்னர் உருவெடுத்த முன்னாள் அதிபர் பெர்டினான்ட் மார்கோஸ் கடைப்பிடித்த ஆரம்பகாலத் தந்திரத்தை தற்போது ரோட்ரிகோ டுட்டர்டே கடைபிடித்து வருகின்றார் எனவும், இதன் மூலம் தனது பதவிக்காலத்தை வரும் 2020அம் ஆண்டுவரை நீடித்துகொள்ள அவர் முயற்சித்து வருகின்றார் எனவும் அவர்கள் கருதுகின்றனர்.

இந்த நிலையில், தலைநகர் மணிலாவில் இராணுவத் தலைமை முகாமை ரோட்ரிகோ டுட்டர்டே பார்வையிட்டார். அங்கு பேசிய அவர்,

எனது பதவிக்காலத்துக்கும் அதிகமாக நான் ஆட்சி செய்ய விரும்பினாலோ, அல்லது சர்வாதிகாரியாக மாறினாலோ நீங்கள் என்னைச் சுட்டுக் கொல்லலாம். நான் இதை விளையாட்டாக கூறவில்லை என்று குறிப்பிட்டார்.

### கிழக்கு ஜெருசலேமை தலைநகராக்கும்

# பலஸ்தீன அதிபரின் முடிவுக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவு

கிழக்கு ஜெருசலேம் நகரைப் பலஸ்தீனம் நாட்டின் தலைநகராக்கும் பலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸ் முடிவுக்கு ஐரோப்பிய யூனியன் ஆதரவு தெரிவித்துள்ளது.



ஜெருசலேம் நகரை இஸ்ரேல் தலைநகரமாக அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கடந்த 6ஆம் திகதி அறிவித்தார். அதைத் தொடர்ந்து பலஸ்தீனத்தில் போராட்டமும், மோதலும் வெடித்தது. 4 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில், பலஸ்தீனத்தின் தலைநகராக ஜெருசலேம் நீடிக்காத வரையில் இந்தப் பிராந்தியத்தில் அமைதி ஏற்படாது எனப் பலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸ் குறிப்பிட்டிருந்தார். பலஸ்தீன நாட்டின் தலைநகராக கிழக்கு ஜெருசலேம் மாற்றப்படும். அங்கு எங்கள் நாட்டின் புதிய தூதரகம் திறக்கப் படும் என அதிபர் மஹ்மூத் அப்பாஸ் கடந்த மாதம் குறிப்பிட்டிருந்தார்.

இந்த முடிவுக்கு ஐரோப்பிய யூனியன் நாடுகள் ஆதரவு தெரிவிக்க வேண்டும். பலஸ்தீனத்தை ஐரோப்பியயூனியன்ஒருநாடாக அங்கீகரிக்க வேண்டும். இதன்மூலம் இஸ்ரேல் நாட்டுடனான அமைதி நடவடிக்கைகளில் எந்த பாதிப்பும் ஏற்பட்டு விடாது என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், பெல்ஜியம் நாட்டின் தலைநகரான புருசெல்ஸ் நகருக்கு சென்றிருக்கும் பலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸ் ஐரோப்பிய யூனியன் நாடுகளின் வெளியுறவு மற்றும் பாதுகாப்புக் கொள்கை தொடர்பான விவகாரங்களுக்கான உயர் பிரதிநிதி பெடெரிக்கா மோகேரினியை சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பின்போது, கிழக்கு ஜெருசலேம் நகரைப் பலஸ்தீனம் நாட்டின் தலைநகராக்கும் பலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸ் முடிவுக்கு ஐரோப்பிய யூனியன் நாடுகளின் வெளியுறவுக் கொள்கைத் தலைமை ஆதரவு தெரிவித்துள்ளது எனப் பலஸ்தீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ப)

# தற்காலிக நிதிப் பிரேரணையில் கையெழுத்திட்டார் அதிபர் ட்ரம்ப்

வொஷிங்டன்,ஜன.24

அமெரிக்காவில் அரசுப் பணிகளுக்கான தற்காலிக நிதி வழங்கும் பிரேரணையில் ட்ரம்ப் கையெழுத்திட்டமையடுத்து அரசுப் பணிகள் முடக்கம் முடிவுக்கு வந்துள்ளது.

அமெரிக்காவில் புதிய வரவு-செலவுத் திட்டத்தை செனட் சபை ஏற்றுக் கொள்ளாமையால் அரசுப் பணிகள் நிறுத்தப்பட்டன. பெப்ரவரி 16ஆம் திகதி வரை அரசுப் பணிகளைக் கவனிக்க நிதியளிக்கும் இந்தப் பிரேரணையை நிறைவேறுவதற்குத் தேவையான 60 வாக்குகளை செனட் சபையில் பெற இயலவில்லை. எல்லைப் பாதுகாப்பு மற்றும் கனவுகளுடன் புதிதாக அமெரிக்காவில் குடியேறியவர்களுக்கான பாதுகாப்புத் தொடர்பான தங்களது விருப்பத்துக்கு அரசு மதிப்பளிக்காததால் இந்தப் பிரேரணையை எதிர்க்கட்சிகள் தோற்கடித்தன. இதனால் கடந்த வெள்ளிக்கிழமை முதல் அரசுப் பணிகள் முடங்கின.

எனவே, அரசுப் பணிகள் தொய்வின்றி நடத்துவதற்காக தற்காலிக நிதி அளிக்கும் பிரேரணை நேற்று முன்தினம் கொண்டு வரப்பட்டது. இதற்கு செனட் சபையும் நாடாளுமன்றமும் ஒப்புதல் அளித்துள்ளது.

இரு அவைகளிலும் பிரேரணை நிறைவேற்றப்பட்டதையடுத்து ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் பிரேரணைல் கையெழுத்திட்டார். இதையடுத்து அரசுப் பணிகள் முடக்கம் தற்காலிகமாக முடிவுக்கு வந்துள்ளது. (ப)

# வடகொரியாவின் அச்சுறுத்தல் எதிரொலி: ஜப்பான் ஏவுகணைப் பாதுகாப்பு ஒத்திகை

ரோக்கியோ,ஜன.24

வடகொரியாவின் அச்சுறுத்தல் தொடர்ந்து வரும் நிலையில், ஜப்பானில் நேற்று முன்தினம் ஏவுகணைத் தாக்குதல் பாதுகாப்பு ஒத்திகை இடம் பெற்றது.



ஐ.நா. மற்றும் அமெரிக்காவின் எச்சரிக்கையை மீறித் தொடர்ந்து அணு ஆயுதங்கள் மற்றும் நீண்ட தூர ஏவுகணைகளைச்சோதித்துவரும்வடகொரியாவின்நடவடிக்கைகள்கொரிய தீபகற்பத்தில் தொடர்ந்து பதற்றத்தை அதிகரித்து வருகின்றன.

கடந்த சில மாதங்களுக்கு முன் அந்த நாடு நடத்திய நீண்ட தூர ஏவுகணைகளில் சில, ஜப்பான் வான்பகுதியைக் கடந்து சென்று கடலில் விழுந்தன.

இதனால் வடகொரியா மீது ஜப்பான் தொடர்ந்து ஆத்திரத்தை வெளிப்படுத்தி வருகிறது. இது தொடர்பாக வடகொரியாவுக்கு, ஜப்பான், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனங்களையும் தெரிவித்தன.

ஆனால் வடகொரியாவின் இந்த ஏவுகணை மற்றும் அணு ஆயுதத் தயாரிப்பு இன்னும் தீவிரமாகும் என ஜப்பான் நம்புகிறது. அவ்வாறு வடகொரியா ஏவுகணைத் தாக்குதலை நடத்தினால் அதை எதிர் கொள்வதற்கான நடவடிக்கைகளை ஜப்பான் ஆரம்பித்துள்ளது.

இதற்காக ஏவுகணைகளை நடுவானில் தாக்கி அழிக்கும் ஏவுகணைகளுடன் போர்க் கப்பல்கள் ஜப்பான் கடலில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மேலும் நிலத்திலும் அது போன்ற ஏவுகணைகளை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இது ஒருபுறம் இருக்க, வடகொரியா ஏவுகணை தாக்குதல் நடத்தினால் அதிலிருந்து மக்களைப் பாதுகாப்பது எப்படி? என்பது தொடர்பான ஒத்திகையை முதன்முதலாக அந்த நாடு நேற்று முன்தினம் நடத்தியது. பாதுகாப்பு இடங்களை நோக்கி மக்களை வெளியேற்றுதல், பதுங்கு குழிகளில் தங்க வைத்தல் போன்ற ஒத்திகைகளைதன்னார்வத்தொண்டர்கள் நடத்திக்காட்டினர்.

ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் உள்ள விளையாட்டு மைதானம், பூங்கா உள்ளிட்ட பகுதிகளில் 300 இற்கும் மேற்பட்ட தன்னார்வத் தொண்டர்கள் இந்தப் பாதுகாப்பு ஒத்திகையை நடத்தினர். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ந்து வரும் நாடுகளில் இந்தியா 62 ஆவது இடம்

புதுடில்லி,ஜன.24

உலகப் பொருளாதார கூட்டமைப்பு வெளியிட்ட பொருளாதார அடிப்படையில் வளர்ந்து வரும் நாடுகளின் பட்டியலில் இந்தியா62ஆவது இடத்தில் உள்ளது.




உலக பொருளாதார கூட்டமைப்பு சார்பில் வாழ்க்கைத் தரம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வருங்கால தலைமுறை திட்டம்ஆகியவற்றின்அடிப்படையில் வளர்ந்து வரும் பொருளாதார நாடுகள் பட்டியல் தயாரிக்கப்பட்டது. அந்த பட்டியல் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு 62ஆவது இடம் கிடைத்துள்ளது. இந்தியாவின் அண்டை நாடுகளான நேபாளம் 22ஆவது இடத்திலும், சீனா 26ஆவது இடத்திலும், பங்களதேஷ் 34ஆவது இடத்திலும், இலங்கை 40 ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 47ஆவது இடத்தில் உள்ளன. இந்தப்பட்டியலில் லித்துவேனியா முதல் இடத்தில் உள்ளது. கடந்த ஆண்டு இந்தியா இந்த பட்டியலில் 60ஆவது இடத்தில் இருந்தது.

வளர்ந்த நாடுகளின் பட்டியலில் நோர்வே முதல் இடத்தில் உள்ளது. அயர்லாந்து, லக்சம்பர்க், சுவிற்சர்லாந்து, டென்மார்க் ஆகிய நாடுகள் முறையே அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. இதில் அமெரிக்காவுக்கு 23ஆவது இடமும், ஜப்பானுக்கு 24ஆவது இடமும் கிடைத்துள்ளன.

வளர்ந்து வரும் நாடுகளின் பட்டியலில் லித்துவேனியாவைத் தொடர்ந்து ஹங்கேரி, அசெர்பைஜான், லத்வியா, போலந்து ஆகிய நாடுகள் முறையே முதல் ஐந்து இடங்களுக்குள் உள்ளன. (ப)

# ரூ.44 கோடி செலவில் ஜெயலலிதா நினைவிடம்

சென்னை,ஜன.24

ஜெயலலிதா நினைவிடத்தை 43.63 கோடி ரூபா செலவில் கட்டத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. அதற்காக அடுத்த மாதம் 24ஆம் திகதி ஜெயலலிதா பிறந்த நாளன்று நினைவிடத்துக்கு முதலமைச்சர் அடிக்கல் நட உள்ளார்.

ஜெயலலிதா கடந்த 2016ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி உடல்நலக்குறைவு காரணமாக மரணம் அடைந்தார்.அவரது உடல் சென்னை மெரினா கடற்கரையில் எம்.ஜி.ஆர். சமாதி வளாகத்தில் அடக்கம் செய்யப்பட்டது.தற்போது அந்த இடத்தில் ஜெயலலிதாவின் படம் வைத்து அ.தி.மு.க. தொண்டர்களும், பொது மக்களும் மலர் அஞ்சலி செய்து வருகிறார்கள். அந்த இடத்தில் ஜெயலலிதாவுக்கு நினைவிடம் கட்ட தமிழக அரசு முடிவு செய்துள்ளது.



அந்த நினைவிடம் எப்படி அமைய வேண்டும் என்பதற்கான வரைபடம் தயாரிக்க ஒப்பந்தம் கோரப்பட்டது. இதில் 4 நிறுவனங்கள் பங்கேற்றன. அந்த 4 நிறுவனங்களின் படங்கள் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.அந்த 4 வரை படங்களையும் ஆய்வுசெய்த முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அதில் இருந்து ஒரு வரை படத்தை தேர்வு செய்துள்ளார். அந்த வரைபடத்தின்படி ஜெயலலிதா நினைவிடம் கட்டப்பட உள்ளது.

அடுத்த மாதம் 24ஆம் திகதி ஜெயலலிதா பிறந்த தினம் கொண்டாடப்படவுள்ளது. அன்று ஜெயலலிதா நினைவிடத்துக்கு முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அடிக்கல் நட உள்ளார்.

அதோடு ஜெயலலிதா நினைவிடத்தின் வரை படத்தையும் அவர் வெளியிடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

# உலகப் பொருளாதார மாநாடு; சுவிஸ் அதிபர்- மோடி சந்திப்பு

டாவோஸ்,ஜன.24

சுவிற்ஸர்லாந்தில் நடைபெறும் உலகப் பொருளாதார மாநாட்டின் இடையே அந்நாட்டின் அதிபருடன் இந்திய பிரதமர் நரேந்திர மோடி சந்தித்து பேசினார்.

சுவிற்ஸர்லாந்தில் உள்ள டாவோஸ் நகரில் 48ஆவது உலகப் பொருளாதார மாநாடு நேற்று ஆரம்பமாகியது. இந்த மாநாடு 26ஆம் திகதி வரை 4 நாள்கள் இடம்பெறவுள்ளது. இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்திய பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் சுவிற்ஸர்லாந்து ெ்ன்றார்.

சுவிற்ஸர்லாந்து சென்றமோடியை அந்நாட்டு பிரதமர் ஸ்டீபன் லோப்வென் நேரில் சென்று வரவேற்றார்.

நேற்று மாநாட்டின் இடையே சுவிற்ஸர்லாந்து அதிபர் அலைன் பெர்செட்டை இந்திய பிரதமர் மோடி



சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்புத் தொடர்பாக டுவிட்டரில் தகவலைப் பதிவு செய்துள்ளார் மோடி.

அதில், சுவிற்ஸர்லாந்து அதிபருடனான சந்திப்பின் போது, இரு தரப்பு ஒத்துழைப்பு மற்றும் உறவுகள் தொடர்பாக மதிப்பாய்வு செய்ததுடன், அதனை மேலும் பலப்படுத்தும் வழிமுறைகள் தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது எனவும் பிரதமர் மோடி டுவிட் செய்துள்ளார். (ப)

# நடிகை ரோஜா வீட்டில் ரூ. 10 லட்சம் மதிப்புள்ள நகைகள் திருட்டு



ஐதராபாத்,ஜன.24

பிரபல நடிகை ரோஜா ஆந்திர மாநிலம் நகரில் தொகுதியின் வை.எஸ். ஆர் காங்கிரஸ் கட்சி எம்.எல்.ஏ. ஆக இருக்கிறார்.

இவருக்கு, சென்னை வளசரவாக்கத்தில் வீடு உள்ளது. பொங்கல் விடுமுறையை சென்னையில் கொண்டாடிவிட்டு, மீண்டும் ஐதராபாத்தின் மணிகொண்ட பகுதியில் தங்களது வீட்டுக்குச் சென்றுள்ளனர்.

அப்போது வீட்டினுள் உள்ள நகைகள் வைக்கக்கூடிய லொக்கரில் இருந்து 10 லட்சம் ரூபா மதிப்பிலான தங்கம் மற்றும் வைர நகைகள் திருடப்பட்டுள்ளன.

இதையடுத்து, நகைகள் திருட்டு போனமை தொடர்பாக பொலிஸார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தினகரன் சிறைக்குச் செல்லும் காலம் அருகில் வந்து விட்டது

சென்னை,ஜன.24

தினகரன் சிறைக்குச் செல்லும் காலம் நெருங்கி விட்டது என மீன் வளத்துறைத் அமைச்சர் ஜெயக்குமார் கூறியுள்ளார்.

அ.தி.மு.கவில் இருந்து ஓரம்கட்டப்பட்ட தினகரனுக்கும், அ.தி. மு.க. நிர்வாகிகளுக்கும் இடையேநாளுக்கு நாள் மோதல் வலுத்து வருகின்றது.ஆர்.கே.நகர் இடைத் தேர்தலில் தினகரன் வெற்றிபெற்ற பின்னர் இந்த மோதல் அதிகமாகியுள்ளது.

ஆர்.கே.நகரில் வெற்றி பெற்றதும் தினகரன் மிதப்பில் இருக்கிறார் என்று அமைச்சர்களும் அ.தி.மு.க. நிர்வாகிகளும் விமர்சித்தனர். ஆர். கே.நகரில் தினகரன் பணத்தை வாரி இறைத்து வெற்றி பெற்றுவிட்டார் எனவும் குற்றம் சாட்டினர். இதற்குத் தினகரனும் பதிலடி கொடுத்து வருகிறார்.

இந்த நிலையில், தினகரன் சிறைக்குச் செல்லும் காலம் நெருங்கி விட்டது என அமைச்சர்




ஜெயக்குமார் கூறியுள்ளார். இது தொடர்பாக சென்னையில் நேற்று அவர் அளித்த பேட்டியில் –

தினகரன் சிறைக்குச் செல்லும் காலம் வந்து விட்டது. புதிய பஸ்களை வாங்குவதற்காகவே தமிழக அரசு பஸ் கட்டணத்தை உயர்த்தியுள்ளது. அ.தி.மு.க. ஆட்சியில் மக்களுக்குஎந்தக்குறையும்இல்லை. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஆளுநர் ஆய்வு செய்து வருவதில் தவறு இல்லை. சட்டத்துக்குட்பட்டே அவர் ஆய்வு செய்து வருகிறார் என்று தெரிவித்துள்ளார்.

# பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேரை விடுவிக்க விருப்பமா, இல்லையா?

## மத்திய அரசுக்கு உயர் நீதிமன்று கெடு

சென்னை,ஜன.24

பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரை விடுவிக்க விருப்பமா, இல்லையா? என்பது பற்றி 3 மாதத்தில் முடிவெடுக்க வேண்டும் என மத்திய அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றுள்ள முருகன், பேரறிவாளன், சாந்தன், நளினி, ஜெயக்குமார், ராபர்ட் பயாஸ், ரவிச்சந்திரன் ஆகிய 7 பேரும் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் உள்ளனர். அவர்களை விடுவிக்க வேண்டும் எனப் பல்வேறு அமைப்புகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

இந்த நிலையில் பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரையும் விடுதலை செய்ய தமிழக அரசு முடிவு செய்தது. இது தொடர்பாக மத்திய அரசுக்கு 2016ஆம் ஆண்டு தமிழக அரசு கடிதம் எழுதியது.



ஆனால், மத்திய அரசு இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளது.

இவ்வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரை விடுவிக்க விருப்பமா? இல்லையா? என்பது தொடர்பாக மத்திய அரசு 3 மாதத்திற்குள் முடிவு எடுக்க வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டு வழக்கு விசாரணையை ஒத்திவைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








தென்மராட்சி இலக்கிய அணியின் அனுசரணையில் கடந்த சனிக்கிழமை மாலை சாவகச்சேரி சங்கத்தானையில் அமைந்துள்ள தமிழ்க் கோட்ட மண்டபத்தில் நாடக விழா இடம்பெற்றது.

ஓய்வுநிலை உப அதிபர் செ.சிவபாதசுந்தரம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக ஓய்வுநிலை அதிபர் திரு.திருமதி.கைலநாதன் தம்பதியினர் கலந்துகொண்டு மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.கடவுள் வாழ்த்தை செல்வி கி.நாமகள் இசைக்க,எழிலுரையை ஆசிரியை ஜெயந்தி ஆற்றினார்.

அதனைத் தொடர்ந்து குழந்தை ம.சண்முகலிங்கத்தின் மொழிபெயர்ப்போடு நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பாக வெளிவந்த ‘தான் விரும்பாத் தியாகி ஒருவர் என்ற நாடகமும் மற்றும் சாவகச்சேரி சித்தி விநாயகர் கலைமன்றத்தின் தயாரிப்பில் உருவான மயானத்தில் மன்னன்’ என்ற இசை நாடகமும் பார்வையாளர்களுக்கு விருந்தாக்கப்பட்டன. (இ-21)

## தமிழர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் உள்ள ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவின் அரசியல், வர்த்தகம், தொலைத்தொடர்புகள் பிரிவுத் தலைவர் போல் கொட்பிறீக்கும், சம்பந்தனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்றமை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் விடுத்த செய்திக் குறிப்பில் மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்தச் செய்திக் குறிப்பின் விவரம் வருமாறு:-

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் அரசியல் பிரிவுத் தலைவருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனுக்கும் இடையில் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பில் இரா.சம்பந்தன் ஐரோப்பிய தூதுவரைத் தெளிவுபடுத்தினார். இதன்போது கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டிய ஒன்று என்பதை வலியுறுத்தினார். இது இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளில் ஒன்று என்பதையும் அவர் எடுத்துரைத்தார்.

இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் உள்ளவர்கள் விடுதலை செய்யப்படவேண்டுமெனவும் இது தொடர்பில் மேலும் இழுத்தடிப்புக்கள் இடம்பெறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் சம்பந்தன் வலியுறுத்தினார்.

படையினர் பாவனையிலுள்ள பொதுமக்களின் காணிகள் இன் னமும் மீளளிக்கப்படாமை தொடர்பில் தமது அதிருப்தியை ஐரோப்பிய தூதுவருக்கு வெளிப்படுத்திய இரா.சம்பந்தன், மக்கள் தமது சொந்தக் காணிகளையே விடுவிக்குமாறு போராட்டங்களில் ஈடுபடுகின்றார்கள், இதனைக் காலந்தாழ்த்துவது மக்கள் மனதில் விரக்தியையும் ஏமாற்றத்தையும் அளிப்பதாகவும் தெரிவித்தார்.

இம்மக்கள் காலாகாலமாக தாம் வாழ்ந்து வந்த இருப்பிடங்களை விடுவித்துத் தருமாறு நீண்ட காலமாகப் போராடி வருகின்றார்கள். இந்த நியாயமான கோரிக்கையைப் புறந்தள்ள முடியாது எனவும் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் தூதுவரைத் தெளிவுபடுத்திய இரா.சம்பந்தன் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் தனது செயற்பாடுகளை விரைவாக ஆரம்பித்து நியாயமான விசாரணைகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உண்மை நிலையை வெளிக்காட்டவேண்டுமெனவும் தெரிவித்தார். நீண்ட நாள்களாகப் போராட்டங்களில் ஈடுபட்டுவரும் இந்த உறவுகளுக்கு தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியும் உரித்து உண்டு எனவும், அந்த உரிமையை காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் நிலை நாட்டவேண்டுமெனவும் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் திருப்தியடையும் வகையில் விசாரணைகளை மேற்கொண்டு அவர்கள் மனதில் ஆறுதலைக் கொண்டுவரும் வகையில் செயற்படவேண்டுமெனவும் தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் தமது கருத்துக்களைத் தெரிவித்த இரா.சம்பந்தன், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் முடிந்ததன் பிற்பாடு இந்த நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டு புதிய அரசமைப்பு வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, பின்னர் அது சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் மக்களின் அங்கீகாரத்துடன் நிறைவேற்றப்படவேண்டும் எனத் தெரிவித்தார். இந்த நடவடிக்கை மேலும் தாமதப்படுத்தப் படலாகாது எனவும், நீண்ட கால தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் இவ்விடயம் முன்னுரிமைப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

மேலும்,ஏற்படுத்தப்படுகின்ற புதிய அரசமைப்பு நியாயமானதும் நிரந்தரமானதும் தமிழ் மக்களுக்குத் திருப்தியளிக்கக்கூடிய ஒன்றாகவும் இருக்கவேண்டுமென்பதையும் வலியுறுத்தினார்.

இந்த விடயங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் மந்த கதியிலான செயற்பாடுகள் தமிழ் மற்றும் சிங்கள மக்கள் மத்தியிலுள்ள கடும்போக்காளர்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல ஓர் உந்துசக்தியாக அமைகின்றது. எனவே, இவ்விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்தி கருமங்கள் துரிதமாக நடைபெறுகின்றமையை உறுதிசெய்யவேண்டும் எனவும், அதனைச் செய்வதற்கு சர்வதேச சமூகம் தனது தொடர்ச்சியான பயனுறுதி மிக்க ஈடுபாட்டை இலங்கை அரசாங்கத்துடன் கொண்டிருக்கவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார்.

## வரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் சிவசக்தி ஆனந்தன் கூறிய போது பார்த்தும், கேட்டும் கொண்டிருந்த ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போது வெளியில் அது குறித்து பேசுகின்றமை வேடிக்கையானதே எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் அவ்வாறு 2 கோடி ரூபா நிதி பெறப்பட்டதை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஏற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் சிறிதரன் போன்றவர்கள் அதனை ஆதாரத்துடன் நிருபிக்குமாறு கேட்கின்றமை யாரை ஏமாற்றுவதற்காக என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடகவியியலாளர் சந்திப்பின் போது சமகால அரசியல் நிலைமைகள் குறித்துக் கருத்து வெளியிடுகையிலையே சுரேஷ் பிறேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

அரசிடமிருந்து 2 கோடி ரூபா நிதியை அபிவிருத்திக்காக பெற்றார்கள் என்றால் அதில் தவறிருக்காது. ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக கொடுக்கப்பட்ட நிதியாகவே இந்த 2 கோடி ரூபா நிதி தரப்பட்டதாம் என்று கூறுகின்றார்.

அப்படியானால், மேலதிகமாக அபிவிருத்திக்குக் கொடுக்கப்பட்ட 2 கோடி ரூபா நிதி எதற்காக சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்படவில்லை? அனைத்து நடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கொடுக்காவிட்டாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஏன் கொடுக்கப்படவில்லை?

இதன் உண்மையான அர்த்தம் மத்திய அரசாங்கத்தின் வரவு - செலவு திட்டத்திற்கு கை உயர்த்தியவர்களுக்கே அந்த ஒதுக்கீடு வழங்கப்பட்டது. அப்படியானால் 2 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு லஞ்சமாகவே பெறப்பட்டிருக்கின்றது.

நான் 4 கோடி ரூபா பெற்றேன் என தற்போது மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கூறுகிறார். மக்கள் திட்டத்தை எனக்கு கொடுத்தார்கள். அதனை நான் அரசுக்கு கொண்டு சென்றேன். அவர்கள் அதனைச் செய்தார்கள். 4 கோடி ரூபாவை நான் என் கைகளில் வாங்கவில்லை. மேலும் அரசிற்கு ஆதரவாக கைதூக்கியதற்காவும் அந்த நிதி கொடுக்கப்படவில்லை என்பதையும் கஜதீபன் போன்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். எனவே கஜதீபனுக்குக் கதை தெரியாவிட்டால் தெரிந்து கதைக்கவேண்டும்.

மேலும் 2 கோடி ரூபா பெற்றுக் கொண்டமையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒப்புக் கொண்டிருக்கும் நிலையில் சிலர் மட்டும் தாங்கள் பெறவில்லை எனவும், உறுதிப்படுத்த முடியுமா எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனை நோக்கிக் கேள்வி எழுப்புவதன் பின்னணி என்ன? இதனைத் தமிழ்தேசிய கூட்டமைப்பு தெளிவுபடுத்தவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கும் 2 கோடி ரூபா நிதி ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு மட்டும் வழங்கப்படாததன் பின்னணியில், தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மத்திய அரசின் வரவு - செலவு திட்டத்திற்கு கையை தூக்கியதற்காக பேசப்பட்ட பேரம் வெளிப்படையாக அம்பலமாகியுள்ளது. - என சுரேஷ் பிறேமச்சந்திரன் மேலும் தெரிவித்தார்.

## சரா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈ.பி. ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் நாடாளுமன்ற உறுப் பினர் சரவணபவனுக்கு பதிலடி வழங்கியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலா இரண்டு கோடி ரூபா ஒதுக்கீட்டை விசேடமாக அரசிடமிருந்து பெற்றுள்ளனர் என கருத்து வெளியிட்டுள்ள சக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனுக்கு அதனால் விரைவில் சிக்கல்கள் வருமென்று சக நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் நேற்று முன்தினம் நடைபெற்ற பொது நிகழ்வொன்றில் கருத்து வெளியிட்டிருந்தார்.

அவரது கருத்துத் தொடர்பில் யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது சுரேஷ் பிறேமச்சந்திரனிடம் எழுப்பபட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலையே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ் விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவு -செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்ததற்காக தலா இரண்டு கோடி ரூபா நிதி ஒதுக்கீடு அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்றத்திலேயே நாடாளுமன்றத்தில் உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்திருக்கின்றார்.

அவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்தன் பேசுகின்ற போது ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எங்கே போனார்கள்? அங்கு இருந்தார்களாயின் என்ன செய்து கொண்டு இருந்தார்கள்? அங்கு ஏன் இதனை மறுதலிக்கவில்லை? அங்கு பேசாமல் இருந்து விட்டு இங்கு வந்து வெளியே வேறு கருத்துக்களை ஏன் வெளியிடுகின்றனர்.

ஆகவே சரவணபவன் போன்றவர்களின் மிரட்டல்களுக்கு நாங்கள் அஞ்சப் போவதில்லை. அவரை ஒரு சருகு புலி போலத் தான் பார்க்கிறோம். மேலும் அவர் ஒரு வியாபாரி. அவ்வளவே. அதனைத்தவிர்த்து பார்த்தால் அவர் ஒன்றுமே இல்லாத ஒருவர். அவருடைய மிரட்டல்களுக்கு அஞ்சும் நிலை யில் நாங்கள் இல்லை. - என சுரேஷ் பிறேமச்சந்திரன் மேலும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரியாலை இளைஞன் சுட்டுக்கொலை:

# 2 அதிரடிப்படை பொலிஸாருடைய விளக்கமறியலை நீடித்து உத்தரவு

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம் அரியாலை பகுதியில் இளைஞர் ஒருவரை பொலிஸ் விடே அதிரடிப்படையினர் சுட்டுகொன்றனர் என்று கூறப்படும் வழக்கில்கைதுசெய்யப்பட்ட இரண்டு விடே அதிரடிப் படையினரது விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்றையதினம் இதுதொடர்பான வழக்கு யாழ்.நீதிவான் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே மேற்படி விளக்கமறியல் நீடிப்பை நீதிவான் எஸ். சதீஸ்கரன் உத்தரவிட்டார்.

நேற்றைய வழக்கு விசாரணையின் போது சந்தேக நபர்கள் தரப்பு சட்டத்தரணி மோகனதாஸ் பிணை விண்ணப்பம் செய்திருந்தபோதும் இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் இன்னமும் பூரணப்படுத்தப்படாதுள்ளன எனக் குற்றப் புலனாய்வு பிரிவு மேலதிக அறிக்கையூடாக மன்றுக்கு தெரியப்படுத்தியிருந்தது. இதனையடுத்து நீதிவான் அந்த இரு பொலிஸாரதும் விளக்கமறியலை அடுத்த மாதம் 06ஆம் திகதி வரை நீடித்து உத்தரவிட்டார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'இன்ஸ்டன் பிட்ஸா' கூட இப்போது கிடைப்பதாகக் கேள்வி. ஒரு சூடு 'மைக்ரோ வேவில்' சூடாக்கி எடுத்தால் உணவு தயாராகிவிடும்.

ஏற்கனவே தயார் நிலையில் செய்யப்பட்டிருக்கும் உணவு ரகங்களை வெறுமனே சூடு காட்டி இறக்குவதுதான் இந்த இன்ஸ்டன் தந்திரம்.

இப்போது தேர்தல் விஞ்ஞாபனங்களும் இன்ஸ்டன் பாணியில் வருகின்றன என்கின்றார் மூத்த அரச அதிகாரி ஒருவர்.

புலிகளின்காலத்தில்–மிகுந்த நெருக்கடிக்கு மத்தியில் அபிவிருத்தித் திட்ட வரைவுகளை மிகுந்த நுணுக்கத்தோடு தயாரித்தசமார்த்தியசாலி அவர். மாங்குளத்தை வடமாகாணத்தின் மையமாக்கும்திட்டம் உட்படபல நுட்பமான விடயங்களைக் கையாண்டு, தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டவர். புலிகளும் கூட அந்த அரச அதிகாரியின் தகுதி, திறமையில் தங்கியிருந்தமையை நேரில் கண்டு, பார்த்து, ஆச்சரியத்தில் வியந்திருக்கிறேன்.

அவர் நேற்று மாலை ஒரு தொலைபேசிஅழைப்புஎடுத்தார்.

"இது என்னடப்பா, அவிச்ச மாவை மீண்டும் அவிக்கிற விளையாட்டுக்கு நீங்கள் எல்லாம் பெரிய பப்ளிசிட்டி கொடுக்கிறியள். அதைச் சுட்டிக் காட்டமாட்டீங்களோ...?" என்ற ஒரு கேள்விக் கணையைப் போட்டார்.

யாழ்ப்பாண மாநகர சபைக்காக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும்தயாரித்துவெளியிட்ட தேர்தல் விஞ்ஞானபனம்தான் 'இன்ஸ்டன் தேர்தல் விஞ்ஞாபனம்' சாயலில் வந்திருக்கின்றது என்பதையே எனக்கு அவர் சுட்டிக்காட்டுகின்றார் என்று என்னால்புரிந்துகொள்ளமுடிந்தது.

யாழ். மாநகரத்தில் தேர்தல் மூலம் தெரிவான கடைசி சபையின் பதவிக் காலம் முடிந்த பிறகு அண்மைக் காலம் வரையான இடைவெளியில் மாநகர சபைக்கான பலதிட்டங்கள் முழு அளவில் தயாராகிவிட்டன.

பழைய இடத்தில் யாழ். மாநகரத்தின் நகரமண்டபத்தைக்கட்டியெழுப்புதல், தண்ணீர்விநியோகத் திட்டம், கழிவகற்றும் சாக்கடைத் திட்டம், திண்மக் கழிவகற்றும் திட்டம் எல்லாம் 'புளூ பிரிண்ட்' மட்டத்துக்குஏற்கனவே தயார். போதாக்குறைக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் யாழ். நகரை மீள் எழுச்சி நகரமாக – நகர அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக – மேம்படுத்துவதற்காக – வீதி அபிவிருத்தி உட்பட – பல திட்டங்களும், ஏற்பாடுகளும் ஏற்கனவே தயார்.

அவற்றை எல்லாம் தேடிப் பிடித்துப் பொறுக்கிப் போட்டு தாங்கள் புதிதாகச் செய்யப் போகின்ற திட்டங்கள், யோசனைகளாக அவிழ்த்து விட்டிருக்கின்றன நம் கட்சிகள்.

ஏற்கனவே தயார் நிலையில் இருக்கும் திட்டங்களை நாம் திறமையாகச் செயற்படுத்திக் காட்டுவோம் என்று அறிவித்திருந்தால் அது வேறு விடயம்.

தங்கள் மாநகரத்துக்குரிய இத்தகைய திட்டங்கள் எல்லாம் ஏற்கனவே தயார் நிலையில் இருப்பதே தெரியாத மாதிரி இவர்கள் கயிறு விடுகின்றமையைப் பார்த்தால், யாழ். மாநகர சபையின் நிலைமை தெரியாதவர்களின் கைகளில் அதனை ஒப்படைக்கப் போகின்றோமோ என்ற பயம் கூட வருகின்றது.

அவர்கள் சமர்ப்பித்த திட்டங்களில் ஒன்றில் கூட ஒரிஜினால்ட்டி' இல்லை. – என்பது தெளிவு. எல்லாம் ஏற்கனவே இறுதியாக்கப்பட்ட திட்டங்கள்தாம்.

அவற்றை செவ்வனே நிறைவேற்றுகின்றமையை இவர்கள் குழப்பாமல் இருந்தால் சரி.

-மின்னல்-

## ஆனைக்கோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருட்டுச் சம்பவம் ஒன்றிற்காக இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்தக் கொலை நடைபெற்ற இடத்திற்கு அருகில் இருந்த மூதாட்டியின் கைப்பையில் 3 சங்கிலிகள் 2 காப்புகள் மற்றும் 40 ஆயிரத்து 500 ரூபா பணம் என்பன காணப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட ஐவரும் ஆறுகால்மடம் பகுதியைச் சேர்ந்த – 22 வயதிற்கு – உட்பட்ட இளைஞர்கள் எனப்பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உறவினர் உதவியுடன் தனிமையில் வாழ்ந்து வந்த 72 வயதுடைய ஜெகநாதன் சத்தியபாமா என்ற மூதாட்டியே கடந்த 21 ஆம் திகதி இரவு இவ்வாறு கொலை செய்யப்பட்டிருந்தார்.

(உ)

## இரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவின் அறிக்கையும் நேற்று நாடாளுமன்றத்தில் சபை முதல்வர் லக்ஷ்மன்கிரியெல்லவினால் சமர்ப்பிக்கப்பட்டன.

நாடாளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் பிற்பகல் 1 மணிக்குக் கூடியது. சபாநாயகர் தமது அறிவிப்பின் போதே இந்த இரண்டு அறிக்கைகளும் சபை முதல்வரால் சமர்ப்பிக்கப்பட்டன என அறிவித்தார்.

பிணைமுறி அறிக்கை தொடர்பில் இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் விவாதம் ஒன்று நடத்தப்பட வேண்டும் என்றுமுன்வைக்கப்பட்டகோரிக்கைக்கு அமைவாக கடந்த 10ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின் பேரில் நாடாளுமன்றம் கூட்டப்பட்டது. என்றாலும், அன்றைய தினம் பிணைமுறி அறிக்கை கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

நேற்று அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இரண்டுஆணைக்குழுக்களின் அறிக்கைகளும் வழங்கப்பட்டன. சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் இந்த இரண்டு அறிக்கைகளும் அடைந்திருந்தன.

இன்று பிற்பகல் 2.30 மணிக்குநடைபெறவுள்ளகட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த இரண்டு அறிக்கைகளையும் எப்போது விவாதத்துக்கு எடுப்பது எனத் தீர்மானிக்கப்படும் என்றார் சபாநாயகர்.

## சு.கவிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அவை எவையும் வெற்றியடையவில்லை; உருப்படவில்லை.

தற்போதும்சு.கவிற்குஎதிராக அதன் சில உறுப்பினர்கள் ஆரம்பித்திருக்கும் கட்சிக்கும் இதே கதிதான் ஏற்படும்.

– இவ்வாறு கூறினார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

ஆனமடுவவில் நேற்றுப் பிற்பகல் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:–

புதிய கட்சியால் சுதந்திரக் கட்சியின்எதிர்காலப்பயணத்தை தடுக்க முடியாது.

சுதந்திரக் கட்சி ஊழல், மோசடி, முறைக்கேடுகளற்ற தூய்மையான கட்சி. நாட்டைச் சீரழித்த ஊழல் ஆட்சியை மீண்டும் நாட்டில் ஏற்படுத்த இந்த நாட்டுமக்கள்தயாராக இல்லை.

இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் சுதந்திரக் கட்சி வரலாற்று ரீதியான வெற்றியைப் பெற்றுக்கொள்ளும்.

அந்த வெற்றியின் பின்னர் நாட்டுக்காக ஆற்றவேண்டிய செயற்பாடுகளை துரிதப்படுத்துவோம். எனக்குப் பின்னர் எனது கதிரையை கையளிப்பதற்கு எனது குடும்பத்தில் எவரையும் நான் தயார்படுத்தவில்லை. நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் ஆற்றவேண்டிய கடமைகளை உரியவாறு நிறைவேற்றும் வலு என்னிடம் உள்ளது.

சட்டத்தின் முன்னிலையில் தவறிழைத்தவர்களைப் பாதுகாக்க நான் தயாராக இல்லை.

ஊவா மாகாண முதலமைச்சர் பாடசாலை அதிபருடன் ஏற்படுத்திக்கொண்ட பிரச்சினையில் அவரை எனது அமைச்சுப் பதவியிலிருந்து விலகுமாறு கட்டளையிட்டு அவருக்கெதிராக பக்கசார்பற்ற விசாரணை ஒன்றை மேற்கொண்டேன். சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு ஆலோசனை வழங்கினேன். சட்டம் சகலருக்கும் பொதுவானதுஎன்பதனாலேயே இந்த நடவடிக்கை.

செல்வச் செழிப்புடன் வசதியான குடும்பப் பின்னணி எனக்கு இல்லை. தினமும் சிரமத்தோடுவாழும் அப்பாவி விவசாய மக்களின் பிரச்சினைகளை நான் நன்கறிந்துள்ளேன்.

அவர்களைப் பொருளாதார ரீதியில் பலப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய சகல நடவடிக்கைகளையும் எடுப்பேன். – என்றார் ஜனாதிபதி.

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை சட்டவிரோதமாக எடுத்துச் சென்ற குற்றத்தின் அடிப்படையில், முள்ளியவளைப் பகுதியில் ஒருவர் கைதாகியுள்ளார்.

ஏனைய மூன்று சந்தேகநபர்களும் விசுவமடு மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேசங்களில் கைதாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், தேர்தல் சட்டத்தை மீறி செயற்படுபவர்களை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த, விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, முல்லைத்தீவு பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இந்த நாடாளுமன்றத்தில் – விவாதம் நடத்தப்பட வேண்டும் என ஜே.வி.பி. அழைப்பு விடுத்துள்ளது.

சர்ச்சைக்குரியி பிணைமுறி மோசடி அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றில்நேற்றுகருத்து வெளியிட்ட போதே ஜே.வி.பியின் தலைவரும் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவுமான அநுர குமார திஸநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:–

பிணைமுறி அறிக்கையில் இந்த மோசடியுடன் தொடர்புபட்டுள்ள அமைச்சர்கள் மற்றும் பிரதமரின் தலையீடுகள் பற்றி தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அதேபோல் முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் மற்றும் மத்திய வங்கியின் அதிகாரிகள் செயற்பட்டுள்ள விதம் தொடர்பிலும் தெளிவாகவுள்ளது.

இந்த மோசடியில் ஊழியர் சேமலாப நிதியே கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. எமது நாட்டின் பிரபல்யமானவர்கள் எவ்வாறு மோசடியுடன் தொடர்புபட்டுள்ளனரென விளங்குகின்றது. இது வெள்ளைப் பத்திரக் கொள்ளையாகும். எமது நாட்டில் கீழ் மட்டத்தில் உள்ளவர்களின் நிதியை உயர்மட்டத்தில் உள்ளவர்கள் எவ்வாறு தந்திரமாகக் கொள்ளையடிக்கின்றனர் என்பது தெளிவாகியுள்ளது. கடையை உடைத்துதிருடுவதும் பாதையில் திருடிச் செல்வதும் தான்எமதுநாட்டில்திருட்டுகளாக இருந்தன. முதல் தடவையாக அறிக்கையொன்று வந்துள்ளது. உயர் அரசியல் அதிகாரம் மற்றும்உயர்அரசபொறிமுறையொன்றைப்பயன்படுத்திகொள்ளையடித்துள்ளமை இதில் வெளியாகியுள்ளது. மக்களின் பணத்தைக்கொள்ளையடிக்கத் தமது அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றனர்.

இந்த மோசடியாளர்களுக்குத் தண்டனையைப் பெற்றுக் கொடுக்கும் செயற்பாட்டை சட்டமா அதிபர் திணைக்களம் தான் முன்னெடுக்க வேண்டியுள்ளது. சட்டமாஅதிபர்திணைக்களமும், இலஞ்ச – ஊழல் ஆணைக்குழுக்களும் கடந்த காலத்தில்செயற்பட்டவிதங்கள் தொடர்பில் எமக்கு நன்கு தெரியும். இவை அனைத்தும் அரசியல் அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிந்துள்ளன.

கட்சித் தலைவர் கூட்டத்தில் பிரதமர் கலந்துகொண்டால் அவர் முகத்துக்குநேர் இந்தவிடயங்கள் தொடர்பில் விவாதிக்க தயார். அமைச்சரவை, மத்திய வங்கியின் ஆளுநரை நியமித்தவர், அவர்களைப் பாதுகாக்க முற்பட்டவர்கள்முன்னிலையில் பேசுவதற்கு ஆசைப்படுகின்றேன். அதனால் தான் நாடாளுமன்றத்தில்கூறுகின்றோம். திருடர்கள் முன்னிலையில் இந்த விவாதம் நடத்தப்படவேண்டும். கடந்த அரசின் காலத்தில் இடம்பெற்ற பாரிய நிதி மோசடிகள் குறித்த அறிக்கை மற்றும் பிணைமுறி அறிக்கை என்பவற்றை எதிர்வரும் 10 ஆம் திகதிக்குமுன்னர்நாடாளுமன்றில் விவாதிக்கவேண்டும். – என்றார்.

## ரயில்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் சங்கம் அறிவித்துள்ளது.

ரயில் இயந்திர சாரதிகளின் சேவைக்காலத்தைநீடிக்காமை, புதியவர்களைப் பணியில் இணைத்துக்கொள்ளாமைஉள்ளிட்ட நான்கு கோரிக்கைகளை முன்வைத்தே இவர்கள் பணிப்புறக்கணிப்பில்ஈடுபடவுள்ளனர்.

## ஊவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்யப்பட்ட ஊவாமாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அவர் நேற்று சரணடைந்தமையை அடுத்து கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

அதன்படி அவரை இரண்டு லட்சம் ரூபா பெறுமதிக்கு சரீரப் பிணையில்விடுக்குமாறுபதுளை நீதிவான் நயந்த சமரதுங்க உத்தரவிட்டார்.

## தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தன்னுடைய ஆதரவு இருக்கும் என்றும்தெரிவித்துள்ளஅனந்தி சசிதரன், அவர்களதுவெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் மக்கள்சிந்தித்துச்செயற்படவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

யாழிலுள்ள அமைச்சரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

நான்சார்ந்ததமிழரசுக்கட்சி எனக்கு எதிராகச் செயற்படுகின்றது. அவர்கள் என்னை அரசியலிலிருந்தே ஓரங்கட்டுவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர். ஆனால் நான் அரசியலுக்கு வரவேண்டுமென்று விரும்பிவரவில்லை. என்னைஅரசியலுக்குஇழுத்துக் கொண்டுவந்துவிட்டனர்.

கடந்த யுத்தத்தால் நேரடியாகவே பாதிக்கப்பட்ட ஒருவர் என்ற வகையில் மக்கள் என்னைத் தெரிவு செய்திருக்கின்றனர். அந்தமக்களுக்கு என்னாலானசேவைகளைநான்செய்து வருகின்றேன்.

ஆனால் எனக்கு அதற்கு பல தடைகளை ஏற்படுத்துவது மட்டுமல்லாது எனக்கு எதிராகவும்பலரும்செயற்படுகின்றனர். இதனால் தான் நடைபெறவுள்ள தேர்தலில் யாருக்கும் ஆதரவை வழங்குவதற்கோ அல்லது பிரசாரங்களில் ஈடுபடுவதற்கோநான்தயாரில்லை. ஆகையினால் இத் தேர்தல் பிரசாரங்களில் இருந்து ஒதுங்கியிருப்பதற்கு முடிவு செய்திருக்கின்றேன்.

இதேவேளை தமிழ்க் கட்சிகளுக்கிடையே தற்போது ஏற்பட்டிருக்கின்றபிரச்சினைகளால் தென்னிலங்கை தேசிய கட்சிகள் இங்கு அகலக்கால் ஊன்றுவதற்கு பல்வேறு பிரயத்தனங்களை முன்னெடுக்கின்றன. ஆகவேமக்கள்தான் சிந்தித்துச் செயற்படவேண்டும். – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# U-19 அரையிறுதியில் இங்கிலாந்தை வீழ்த்தியது ஆஸ்திரேலியா

ஜுனியர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி ஆஸ்திரேலியா அரை இறுதிக்குத் தகுதி பெற்றது.

19 வயதுக்குட்பட்டவர்களுக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி நியூஸிலாந்தில் நடைபெற்று வருகிறது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலியா 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி அரை இறுதிக்குத் தகுதி பெற்றது.

முதலில் விளையாடிய ஆஸ்திரேலியா 33.3 ஓவர்களில் 127 ஓட்டங்கள் எடுத்தது. அணியின் கப்டன் ஜேசன் சன்கா அதிகபட்சமாக 58 ஓட்டங்கள் எடுத்தார். இங்கிலாந்து அணி சார்பாக பாம்பர், பென்னிடன், ஜேக்ஸ் தலா 3 விக்கெட்டுகள் எடுத்தனர். பின்னர் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 234 ஓவரில் 96 ஓட்டங்களில் சுருண்டது. பென்டன் அதிகபட்சமாக 58 ஓட்டங்கள் எடுத்தார். லொயிட் போப் 35 ஓட்டங்கள் கொடுத்து 8 விக்கெட்டுகள் வீழ்த்தி சாதனை படைத்தார்.

இன்று நடைபெறும் காலிறுதியில் பாகிஸ்தான்-தென்னாபிரிக்க அணிகளும், நாளை நியூஸிலாந்து-ஆப்கானிஸ்தான் அணி களும், நாளை மறுதினம் இந்தியா-பங்களாதேஷ் அணிகளும் மோதுகின்றன.

# மத்தியூஸை அடுத்து குஷலும் விலகல்

உபாதை காரணமாக அணித் தலைவர் மத்தியூஸ் தொடரில் இருந்து விலகிய நிலையில் குஷல் ஜனித் பெரேராவும் உபாதை காரணமாக வெளியேறியுள்ளார்.

இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரரான குஷல் ஜனித் பெரேரா கடந்த ஸிம்பாப்வே அணிக்கெதிரான 2 ஆவது போட்டியில் துடுப்பெடுத்தாடும் போது உபாதையால் பாதிக்கப்பட்டார்.

இந்த நிலையில் பங்களாதேஷில் இடம் பெற்றுவரும் முத்தொடர் ஒருநாள் போட்டியின் அடுத்த போட்டியில் அவருக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குஷல் ஜனித் பெரேராவுக்குப் பதிலாக துடுப்பாட்ட வீரர் தனஞ்சய டி சில்வா அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் உபாதை காரணமாக முத்தொடர் ஒருநாள் போட்டியில் இருந்து விலகியுள்ளமையுடன் பங்களாதேஷ் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரிலிருந்தும் விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# FIFA தங்கக் கிண்ணத்தை இன்று பார்வையிடலாம்




ரஷ்யாவில் இந்த வருடம் நடைபெறவுள்ள உலக உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் வெற்றிபெறும் அணிக்கு வழங்கப்படும் வெற்றிக்கிண்ணம் இலங்கைக்கு எடுத்துவரப்பட்டுள்ளது

இந்த வெற்றிக் கிண்ணம் நேற்று இலங்கைக்கு எடுத்துவரப்பட்டுள்ளது. இது கொழும்பு ஷங்ரி - லா ஹோட்டலில் காட்சிக்கு வைக்கப்படவுள்ளது. இதனை வரவேற்கும் நிகழ்ச்சியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்ளவுள்ளார்.

18 கரட் தங்கத்திலான 1.4 கிலோகிராம் எடையைக்கொண்ட இந்த வெற்றிக் கிண்ணத்தை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இன்று காலை 9 மணி முதல் ரசிகர்கள் பார்வையிட முடியும். இதன் ஆரம்பநிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்ளவுள்ளார்.

உலக உதைபந்தாட்ட வெற்றிக் கிண்ணம் இலங்கைக்கு கொண்டுவரப்படுவது வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும் என்று இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் அனுர டி சில்வா தெரிவித்துள்ளார். உலகக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுத்தொடர் எதிர்வரும் ஜுன் மாதம் 14ஆம் திகதி ஆரம்பமாகி ஜுலை மாதம் 15 ஆம் திகதி வரை ரஷ்யாவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல். தொடரில் பல கோடிக்கு விலை போகவுள்ளார் அதிரடி வீரர்!

இந்தியாவில் ஆண்டுதோறும் நடைபெற்று வரும் உள்ளூர் தொடரான ஐ.பி.எல். தொடருக்கு இந்தியாவில் மட்டுமல்ல உலகம் முழுவதிலும் ரசிகர்கள் உள்ளனர்.

இதனால் தான் இந்தத் தொடர் தற்போது 10 ஆண்டுகளையும் தாண்டி வெற்றிகரமாக சென்று கொண்டிருக்கிறது.

இந்த வருட ஐ.பி.எல். ஏலத்தில் நியூஸிலாந்து அணியின் அதிரடி ஆட்டக்காரர் கலின் முன்ரோ அதிக விலைக்கு வாங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏனெனில் ரி-20 போட்டிகளில் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசை பட்டியலில் முதலிடத்தில் உள்ளார். தனது கடைசி ஆறு ரி-20 போட்டியில் 388 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

கடந்த 2016 ஆம் ஆண்டு நடந்த இலங்கைக்கு எதிரான ரி-20 போட்டியில், 13 பந்துகளில் அரைச்சதம் அடித்திருக்கும் இவர் ஐ.பி.எல். தொடரில் இதுவரை 4 போட்டிகளில் மட்டுமே விளையாடியுள்ளார்.



ஆனால், தற்போது ரி-20 உலகின் சூப்பர் ஸ்டாராக வலம் வருவதால், இம்மாதம் பெங்களூரில் நடக்கவுள்ள ஐ.பி.எல்.. ஏலத்தில் முன்ரோவை ஏலத்தில் எடுக்க போட்டி நிலவும் எனவும், பல கோடிக்கு வாங்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

(பு)

# ஏப்ரலில் ஐ.பி.எல். திருவிழா ஆரம்பமும் முடிவும் மும்பையில்

ஐ.பி.எல். கிரிக்கெட் திருவிழா எதிர்வரும் ஏப்ரல் 7ஆம் திகதி முதல் மே 27ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. மும்பை வான்கடே மைதானத்தில் தொடக்க ஆட்டமும், இறுதிப் போட்டியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பி.சி.சி.ஐ. ஆல் நடத்தப்படும் ஐ.பி.எல். ரி20 கிரிக்கெட் தொடர் 10 ஆண்டுகளைச் சிறப்பாக முடித்துள்ளது. 11ஆவது பருவ காலத் தொடர் இந்த வருடத்தில் ஏப்ரல் மாதம் முதல் மே மாதம் வரை நடத்தப்படும் என்று ஏற்




கனவே அறிவித்திருந்தது. இதில் பங்கேற்கும் 8 அணிகள் பல்வேறு கோரிக்கைகள் வைத்திருந்தன. அதில் வீரர்களைத் தக்கவைத்துக் கொள்ளும் விதிமுறை மாற்றம் முக்கியமானதாகும். எதிர்வரும் 27ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை வீரர்களின் மெகா ஏலம் இடம் பெறவுள்ளது. இதில் 578 வீரர்களின் பெயர் இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில், ஐ.பி.எல். ஆட்சி மன்றக்குழு நேற்றுக் கூடியது. இதில் ஏப்ரல் 7 ஆம் திகதி முதல் மே 27ஆம் திகதி வரை சுமார் 62 நாள்கள் போட்டியை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் முதல் போட்டியையும், இறுதிப் போட்டியையும் மும்பை வான்கடே மைதானத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஐ.பி.எல். தொடரில் 2ஆவது ஆட்டம் அல்லது இரவு ஆட்டம் இதுவரை இரவு 8 மணிக்கு இடம்பெற்றது. போட்டி முடிவதற்கு நள்ளிரவு ஆகும் என்பதால் ரசிகர்களுக்கு சிரமம் ஏற்படுகிறது.

இதைக் கருத்தில் கொண்டு 8 மணிக்கு தொடங்கும் போட்டியை 7மணிக்குத் தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதேபோல் மாலை 4 மணிக்கு தொடங்கும் போட்டியை 5.30 மணிக்கு தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு நேரடி ஒளிபரப்பு உரிமம் பெற்றுள்ள நிறுவனமும் சம்மதம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெளுக்குளத்தில் வீட்டுக்குள் புகுந்த முதலை!


அதிகாலை வேளையில் வீடொன்றுக்குள் புகுந்த முதலையொன்றை பொதுமக்கள் இணைந்து மடக்கிப் பிடித்துள்ளனர்.

வவுனியா, நெளுக்குளம் பொலிஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள வீடொன்றிற்குள் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இந்த முதலை புகுந்துள்ளது.

வீட்டினுள் புகுந்து மறைந்து கொண்ட ஆறு அடி நீளமான முதலையை அவதானித்த வீட்டு உரிமையாளர் அயலவர்களின் உதவியுடன் அதனை மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.



வவுனியா பிரதேசங்களில் உள்ள குளங்களின் நீர்வற்றியதன் காரணமாக முதலைகள் வெளியேறி வீடுகள் மற்றும் வயல் நிலங்களை நோக்கிப் படையெடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (க)



இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு வருகை தந்த சிங்கப்பூர் பிரதமர் லீ ஷியன் லூங்கி மற்றும் அவரது பாரியார் நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தனர். இரு நாடுகளுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை நேற்றுக் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

(மேலும் செய்தி 02 ஆம் பக்கத்தில்)








இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் அறிவியல் மேதையுமான ஏ.பி.ஜெ.அப்துல்கலாம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு வருகை தந்த நினைவு தினம் பாடசாலை அதிபர் சதா நிமலன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் அப்துல்கலாம் பற்றிய நினைவுப் பேருரைகள் மற்றும் அவரின் நினைவாக மரம் நடுகையும் இடம்பெற்றது.




சாயிராம்

வருடத்தில் ஒரு தடவை!

**வியாபார நோக்கமற்ற**

**சாயி யாத்திரை - ஒரு சாயி சேவை**



சீரடி - புட்டபர்த்தி,
திருப்பதி,
சென்னை (மைலாப்பூர்
சீரடி சாயி கோவில்,
சுந்தரம் சத்யசாயி மந்திர்)



10 நாட்கள்

(25-06-2018 தொடக்கம் 03-07-2018 வரை)

விமானக்கட்டணம், இந்தியா வீசா, இந்திய ரயில் (A/C) கட்டணம், இந்திய பஸ் கட்டணம், தங்கும் இடவசதி, விஷேட வழிகாட்டித்துணை, சீரடி ஆராத்தி, விஷேட தரிசன ஒழுங்குகள், தரிசனக் கட்டணங்கள். சாயிநிலையத்திலிருந்து Airport போக, வர ஏற்பாடுகள் உட்பட. சென்னையில் 2 நாட்கள் காலை ஆகாரத்துடன்

**ஸ்ரீ சத்ய சாயிபாபா (கொழும்பு) மத்திய நிலையம் மற்றும் சீரடி சாயி (இலங்கை) மத்திய நிலையம்**

மேலும் விபரங்களுக்கு : **பொருளாளர்**

T.P : 077-7343551, 0777-485461, 071-6636149

**சாயி நிலையம்,**

113, புதுச்செட்டித் தெரு, கொழும்பு - 13




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.01.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.